“கம்ப நிலய”ப் பிரசுரம்—கக.

சுவாமி விவேகானந்தர் எழுதிய

வர்த்தமான பாரதம்

மஹேச குமார சர்மா
மொழிபெயர்த்தது

கம்ப நிலயம், சென்னை.

விலை அணா க௦

இந்த புதிய விஞ்ஞானத்தில்
இலக்கியம்.
இது இந்தியாவுக்கே.

வர்த்தமான பாரதம்

அல்லது

பாரத நாட்டின் தற்கால நிலை

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள்

இயற்றிய வங்காளி முதனூலினின்று

மஹேச குமார சர்மா

தமிழில் மொழிபெயர்த்தது

கப்ப நிலயம், சென்னை.

சகம் ௧௮௪௪.

தாதா அச்சுக்கூடம்
௫, தம்பு செட்டித் தெரு, சென்னை.

முன்னுரை

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர் திருவாய் மலர்ந்தருளிய "வர்த்தமான பாரதம்" என்னும் நூலைத் தமிழ்ப்படுத்தி இன்று தமிழ்த் தெய்வத்தின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கிறோம்.

இதை மொழிபெயர்த்த ஸ்ரீ மஹேச குமார சர்மாவைத் தமிழுலகம் நன்கறியும். அவருடைய சுவாமி விவேகானந்த விஜயத்தையும், ராமகிருஷ்ண விஜயத்தையும், ஆனந்தமடத்தையும், நாமே வெளியிட்டிருக்கிற வால்மீகி விஜயத்தையும் பார்த்தவர்களுக்கு இத் தகைய நூல்களை மொழிபெயர்ப்பதற்கு அவருக்கு இருக்கும் அபார யோக்கியதையைப்பற்றி நாம் விரித்துரைக்க வேண்டுவதில்லை. இவர் மொழிபெயர்த்த நூல்கள் தர்ஜுமாக்கள் போலவே இருப்பதில்லை—அவை முதனூல்களேதான் என்ற பிரமத்தைப் படிப்போர் அனைவருக்கும் உண்டாக்கிவிடுகின்றன. அதிலும் இந் நூலில் நமது நண்பர் தமது சம்ஸ்கிருத ஞானத்தையும் தமிழறிவையும் பரிபூரணமாய்ப் பிரயோகித்து, யோகத்தில் நின்று, ஓர் ஆச்சரியப்படத்தக்க நடையைச் சிருஷ்டித்துக் காட்டியிருக்கின்றனர். இவருடைய நடையைப் பார்க்கும்போது நமக்கு உயர்ந்த ஒட்டு மாங்கனியின் ஞாபகம் வருகிறது. இந் நூலில் தனித் தமிழின் செல்வமும் சம்ஸ்கிருதத்தின் செல்வமும் ஜீவசக்தி நிரம்பியவையாய் ஒன்றோடொன்று கலக்க, சம்ஸ்கிருதத்தின் காறல்களைத் தமிழின் இனிமையும் தமிழின் காடின்யங்களை சம்ஸ்கிருதத்தின் மார்த்தவமும் உட்புகுந்து மாற்றி, அவர் நடைக்கு உயர்ந்ததோர் கனிவைக் கொடுத்திருக்கின்றன. பிரசங்கங்களில் கம்பீரமான "வாக்தாட்டி"யை விரும்புவோர் இந் நூலைப் பன்முறையும் படித்துக் கண்டஸ்தமாகச் செய்து கொண்டால் பெரும் பயனை அடைவர் என்பதில் ஐயமில்லை.

முதனூலின் கருத்தின் பெருமையையும் நடையின் கௌரவத்தையும் பற்றி ஸ்ரீமத் சாரதானந்த சுவாமிகள் எழுதிய முக

வுரையை நமது ஆசிரியரே தமிழ் செய்து இந்நூலுக்கு முகவுரையாக வைத்திருப்பதால் நாம் அதிகம் எழுதவேண்டுவதில்லை. சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களாகிற உத்கிருஷ்டமான அச்சில் மொழிச்சிற்பியான ஸ்ரீ மஹேச குமார சர்மாவானவர் தமிழ் என்கிற உருக்கிய தங்கத்தை வார்த்து எடுத்து மெருகுபோட்ட சுவர்ண விக்கிரகமாகிய இந் நூலைக் கற்றோரும் மற்றோரும் காமுறுவர் என்பது நிச்சயம்.

இனி முதனூலையும், சுவாமி சாரதானந்தரின் முகவுரையையும் தமிழ் செய்து வெளிப்படுத்த நமக்கு அனுமதி கொடுத்த கல்கத்தா ராமகிருஷ்ண மடத்துத் தலைவராகிய சுவாமி சாரதானந்தருக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். *

இந் நூலின் விற்பனையில் கிடைக்கும் லாபத்தில் ஒரு பாகத்தை ராமகிருஷ்ண மடத்துக்குக் கொடுக்க நாம் வாக்களித்திருக்கிறோம் என்பதையும் இங்கு நாம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

முடிவாக, பிராமண அப்பிராமண வாதங்கள் முற்றிவரும் இந் நாளில் சுவாமி விவேகானந்தரின் இவ் ஆராய்ச்சி இவ் விவகாரத்தின் ஆணி வேரைத் தாக்கி, அதை ஒழித்து, தமிழ் நாட்டில் ஓர் சாசுவதமான ஐக்கியத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றலுடையதா யிருக்கிறது. ஆகையால் தமிழ் மக்கள் அனைவரும் இந்த ரிஷிவாக்கை பக்தி சிரத்தையோடு படித்து உண்மை தெளிந்து, அவ் உண்மையாகிற துருவ நக்ஷத்திரத்திற்கேற்பத் தமது வாழ்க்கைக் கப்பலை நடத்தி, ஜாதீய ஐக்கியக் கரையேறிக் களிப்பர் எனப் பெரிதும் நம்புகிறோம்.

கம்ப நிலயம், சென்னை.
துன்மதி௵ ஆடி௴ ௮௳ } வ. வெ. ஸு. ஐயர்.

---

* ௨௧-௨-௧௯௧௧-இல் சுவாமி சாரதானந்தருக்காக சுவாமி சாந்தி சைதன்னியர் நமக்கு எழுதிய கடிதப்படி.

ஸ்ரீ சாரதானந்த சுவாமிகள் எழுதிய

நான்முகம்

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் சர்வதோமுகமான பிரதிபையினின்றும் பிறந்த "வர்த்தமான பாரதம்" என்னும் இச் சிறுநூல் வங்க சாகித்தியத்திலே விலையற்ற ரத்தினமென விளங்குகின்றது. இருள் மூடிய பாரத வருஷ இதிகாசத்திலே ஒருவகையான முன் பின் சம்பந்தத்தைக் காணப்பெறும் பாக்கியம் வெகு சிலருக்கே வாய்க்கின்றது. ஸ்தூல திருஷ்டிகளான சாதாரண வாசகர்களுக்கு இந்த சம்பந்தத்திலே இரண்டொரு தர்மவீரர் அல்லது கர்மவீரரின் உருவங்களும், இரண்டொரு தர்மவிப்லவம் (சமயபுரட்சி) அல்லது ராஜ்ஜிய விப்லவங்களும் யாதொரு தொடர்புமின்றி இணைக்கப்பட்டிருப்பதைத் தவிர்த்து வேறொன்றும் புலப்படுவதில்லை. ஆராய்ச்சியில் வல்ல புகழ்விருப்பினரான மேனாட்டுப் புலவர்களின் சூக்ஷ்ம திருஷ்டிகூட கீழ்நாட்டு ஜனசமூகத்தின் மனப்பான்மை, ஆசாரவிவகாரங்கள், காரியதோரணை முதலியவற்றால் தகையப்பட்டு, ஈண்டுப் பலகாலும் நேரான வழியை விடுத்து, மூடுபனி சூழ்ந்த 'கிம்பூதகிமாகார'மான என்னென்னவோ உருவங்களையெல்லாம் காண்கின்றது. விசேஷமாக எந்த சக்தியானது பாரததேசத்தின் எலும்பிலும் தசையிலும் புகுந்திருக்கின்றதோ, எதனுடைய சலனமானது வைதிகாதிகார காலம் தொடங்கி பௌத்தாதிகார காலம் வரையிலே சகல விதமான உயர்ந்த ஆதர்சங்களையும் உண்டாக்கிப் பாரத வருஷத்தை ஜகத்துக்குச் சிரோபூஷணமாக்கியதோ, எது குறையத் தொடங்கிய காலத்து, முசல்மான் முதலிய விஜாதீய அரசர்கள் பாரத நாட்டில் பிரவேசித்தார்களோ, அந்தத் தர்ம சக்தி

மேற்றிசைப் பண்டிதர்களின் திருஷ்டியில் விபரீதமான நிழலுருவமாகத் தோற்றுகின்றது. ஆகவே, அந்த சக்தியினால் உண்டான ஜாதீய உயர்வு தாழ்வுகள் அவர்களது அறிவுக்கு முற்றிலும் அகோசரமாகவே யிருக்கின்றன. வியஷ்டிக்குரிய குணங்களே, சமஷ்டி ரூபமாய்ச் சமாஜத்திற் புகுந்து அந்தந்த ஜாதிகளுக்கு அவ்வற்றிற்குச் சிறப்பாகிய ஜாதீயத்தன்மையை உண்டாக்குகின்றன. இந்த ஜாதீய உணர்ச்சி வெவ்வேறு ஜாதிகளுக்கு வெவ்வேறா யிருப்பதனாலேயே, ஒரு ஜாதியின் கருத்துக்களை வேறொரு ஜாதி அறிந்துகொள்வது கஷ்ட சாத்தியமாயிருக்கின்றது. ஆகையினாலேயே, பாரத நாட்டின் இதிகாசத்தை முன்பின் தொடர்ச்சி முரணாது அறிய முயலும் மேற்றிசைப் புலவர், பலகாலும் ஆசாபங்கம் அடைவாராயினர். எமது தாற்பரியம் பாரத நாட்டில் இதிகாசம் குறைவாயிருக்கிறதென்பதன்று, மற்று, அதில் முன்பின் சம்பந்தம் அமைப்பதில் பாரதவாசிகளே சமர்த்தராவ ரென்பதும், அதன் எதார்த்த பாடகிரமம் அவர்கள் வாயிலாகவே என்றைக்காவது ஒரு நாள் வெளிப்பட வேண்டுமென்பதுமே யாம். விஸ்தாரமான தேச சஞ்சாரம், இறுமாப்புக்கொண்ட அரசர் முதல் ஏழைக்குடியானவர் வரை எல்லோரோடும் சமபாவமாய்க் கலந்து பழகுதல், பாரத தேசத்தினுடையவும் ஏனைய தேசங்களினுடையவுமான ஆசார விவகாரங்களையும் ஜாதீய உணர்ச்சிகளையும் சுயநலமற்ற புத்தியோடு அறிதல், விரிந்த கல்வி, சுதேச வாசிகளிடம் அளவு கடந்த அன்பு, அவர்களது சுக துக்கங்களில் ஆழ்ந்த ஒத்துணர்வு—ஆகிய இவற்றின் பயனாகச் சுவாமிஜியின் மனத்தில் தீட்டப்பட்ட பாரத நாட்டின் சித்திரம் எதுவோ அதன் நிதரிசன சொரூபமே இந்த "வர்த்தமான பாரதம்" என்பது.

பாரத நாட்டு இதிகாசத்தின் சிக்கலான பிரசினங்களுக்குச் சமாதானம் சொல்வதில் சுவாமிஜி எவ்வளவு மட்டிலும் சித்தியடைந்தார் என்னும் விஷயத்தில் யாம் ஒன்றும் சொல்வதற்

இல்லை. படிப்போருக்குப் பொறுமை இருந்தால், அவர்களே அதைச் சிந்தித்துக் கண்டுகொள்ளட்டும். சுவாமிஜியைப் போன்ற மகா புருஷனது அசாமானிய அனுபவத்தினின்றும் பிரதிபையினின்றும் உற்பத்தியான இந்த ஆராய்ச்சி நூல் படிப்பதற்கும் சிந்தித்துப் பாராட்டுவதற்கும் உரியதென்பதில் யாரே சந்தேகம் கொள்ளக்கூடும்?

"வர்த்தமான பாரதம்" முதலில் பிரபந்த ரூபமாக முன்னே பக்ஷாந்திர பத்திரிகையாக இருந்த "உத்போதனம்" என்னும் வங்காளிப் பத்திரிகையிலே பிரசுரிக்கப்பட்டது. அதன் நடை வெகு சிக்கலானதென்றும், பொருள் விளங்குவது கடினமென்றும் அப்பொழுது அனேகர் சொல்லக் கேட்டிருக்கிறோம். இப்பொழுதும் அனேகர் அவ்வாறே சொல்லக் கூடும்; ஆனால் நாம் இப்பொழுது அந்த அபிப்பிராயத்துக்குச் சார்பாக நின்று, நடை குற்றமுள்ளதென்று ஏற்றுக்கொண்டு, வெட்கத்தோடு "வர்த்தமான பாரத"த்தைக் காணிக்கையாகக் கையிலேந்தி, வாசகர்களின் சமீபத்தில் வந்தோமில்லை. நாம் இந் நூலின் கருத்துக்கும் நடைக்கும் உள்ள அற்புதமான ஒற்றுமையைக் கண்டு உள்ளம் பூரிக்கின்றோம். வங்க பாஷையானது இவ்வளவு சொற்ப சொற்றொகுதிக்குள் இவ்வளவு விரிந்த கருத்துக்களை வெளிப்படுத்த வல்லதென்று நாம் இதற்கு முன் எப்பொழுதும் யாண்டும் கண்டதில்லை. மொழிகளின் மேன்மையும் இதனுள் பல இடங்களில் சிறப்பால் இலங்குகின்றது. அனுவசியமான சொற்றொடர்கள் இதில் அருகியிருப்பதை நோக்குங்கால், ஆசிரியர் தாம் பிரயோகிக்கும் ஒவ்வொரு சொல்லையும் அளந்து அவசியத்துக்கேற்ப பிரயோகித்தாற்போலவே தோற்றுகின்றது.

அன்றியும் இஃதோர் தரிசன நூல். பாரதவருஷத்தில் வசித்துவரும் சகல ஜாதிகளின் மானஸிக பாவனா ராசிகளினின்றும் உண்டான போராட்டம் பல்லாயிரம் ஆண்டுகளாக அவர்களை இயக்கி, மெல்ல மெல்ல இனம்இனமாக வகுத்து

உயர்த்தியும், தாழ்த்தியும், நிலை மாற்றியும், நாட்டிலே சுகதுக்கங்களின் அளவை எவ்வாறு ஒருகால் குறைக்கவும் ஒருகால் பெருக்கவும் செய்தது? பலவகைப்பட்ட ஜாதிகளின் கலப்பும், பலவகைப்பட்ட ஆசாரவிவகாரங்களும் காரியதோரணைகளும் ஏற்பட்டிருந்தபோதிலும், பார்வைக்குச் சம்பந்த மற்றதுபோல் தோன்றும் பாரத ஜாதி சமூகமானது எந்தச் சூத்திரத்தினால் கட்டப்பட்டுத் தன்னை ஹிந்து என்று பொதுவாய்ச் சொல்லிக் கொள்கின்றது? இவற்றின் பிற்கால கதி எந்தத் திக்கை நோக்கிச் செல்கின்றது?—என்னும் பெரிய தரிசன விஷயமே "வர்த்தமான பாரத"த்திலே ஆராயும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட விஷயமாம். அப்படியிருக்க, இதன் நடை சிங்கார கருணாரசங்கள் ஒழுக இயற்றப்பட்ட 'நாவல்' நாடகங்களின் நடையை எப்படி ஒத்திருக்க முடியுமோ எமக்குத் தெரியவில்லை. இந் நாட்டிலே இப்போது உண்மையான ரஸக்ஞர்கள் முற்றிலும் இல்லாமை நமது துர்ப்பாக்யமே. ஆழ்ந்த சிந்தையினின்றும் உண்டாகும் விஞ்ஞான, இதிகாச, தரிசன முதலிய நூல்களையோ, அல்லது சிங்கார கருணாரஸங்களைத் தவிர்த்து வீரரஸம் நிறைந்த நூல்களையோ, இயற்றும் ஆசிரியர்களும் படிக்கும் வாசகர்களும் மிகவும் குறைவாயிருக்கின்றனர். சாமானிய ஜனங்களைப்பற்றியோ கேட்க வேண்டியதேயில்லை. அவர்களுடைய ருசி பரிஷ்கரிக்கப்பட்டுச் சுத்தமாகிச் சிந்தாசீலர்களின் நன்கு மதிப்புக்கு உரியதாகும் காலம் இப்பொழுதும் வெகுதூரத்திலிருக்கிறது. ஆகையால் நடை விஷயத்திலும் இத்தகைய ஆக்ஷேபத்துக்குச் சமாதானம் கூறுவது அனாவசிய மென்று கருதி, வாசகர்களே தம்தம் புத்தியைக் கொண்டு இதைத் தீர்மானித்துக் கொள்வரென்று விட்டுவிடுகிறோம்.

"வர்த்தமான பாரதம்" முதலில் தோன்றியபோது, பிராமணர்களின்மேல் சுவாமிஜி அதிக துவேஷம் பாராட்டுகிறாரென்று ஒரு ஆக்ஷேபம் கிளம்பியது. அதைப்பற்றியும் நாம்

சுபக்ஷமாகவாவது விபக்ஷமாகவாவது ஒன்றும் கூறுது, வாசகர்களின் சத்திய விருப்பத்தையும் ஸ்பஷ்ட வாதத்தையுமே நம்பி வாளா விருப்போம். ஆயிரம் ஆக்ஷேபம் செய்தாலும், சத்தியத்தை அசைக்கவாவது அசத்தியத்தை நிலைப்பிக்கவாவது முடியாது. மனமும் வாக்கும் ஒற்றுமைப்படச் செய்வதே சத்தியத்தை அடைவதற்குப் பிரதான சாதன மென்பதை நாம் நித்தியமும் நினைவு கூர்தல் வேண்டும். நிந்தை மொழிகளின் கடுமையான கசையடியால், நற்குடிப்பிறப்பினரின் மனத்திலே, தம் குற்றங்களை உணர்ந்து சீர்திருந்த வேண்டுமென்னும் விருப்பமே மேலிடும். ஏனையருடைய மனமோ இந்தத் தாக்குதலினுல் கயமை, பொய்மை, இம்சை, உண்மையை மறைத்தல் முதலிய தீயவழிகளைப் பின்பற்றி அதோகதியின் பாதையில் மகாவேகமாய் முன் செல்லா நிற்கும்.

இந்தச் சந்தர்ப்பத்திலே பாரத நாட்டின் மகாகவியினது சுலோக மொன்று நினைவுக்கு வருகின்றது,—

"அலோக ஸாமாந்யம் அசிந்த்யஹேதுகம்
நிந்தந்தி மந்தாச் சரிதம் மஹாத்மநாம்."

"சாமான்ய ஜனங்களின் கருத்தோ டொட்டாததும் சிந்தைக்கெட்டாத காரணங்கொண்டதுமான மகாத்மாக்களின் ஒழுக்கத்தை மந்தமதிகள் நிந்திக்கின்றனர்."

வர்த்தமான பாரதம்

அல்லது

பாரத நாட்டின் தற்கால நிலை

வைதிக புரோகிதர்களின் மேலான பலத்துக்கு ஆதாரமாயிருப்பது யக்ஞயாகாதி கர்மங்களின் மந்திர ஞானம். இந்த மந்திர பலத்தினால் அழைக்கப்பட்ட தேவர்கள் விண்ணுலகத்திலிருந்து இறங்கி வந்து, யாகங்களில் அர்ப்பிக்கப்படும் அன்னபானங்களை உகந்தருளி யாகம் செய்யும் யஜமானர்களின் இஷ்டகாரியங்களை ஈடேற்றுகிறார்கள். ஆதலின், அரசர்களும் பிரஜைகளும் இகலோக சுகத்தை விரும்பி இந்தப் புரோகிதர்களின் தயவை எதிர்பார்த்தவர்களாயிருக்கின்றனர். வேதங்களில் “ஸோமோ ராஜா” என்று வருணிக்கப்படும் சோமலதை என்னும் ஆட்டாங்கொடி புரோகிதனால் பூஜிக்கப்பெற்று அவனுடைய மந்திர பலத்தினால் புஷ்டியடைகிறது. ஆகவே தேவர்கள் தங்களுக்குப்பிரியமான ஆகாரமாகிய சோமரஸத்தை ஆகுதியாக அர்ப்பிக்கும் புரோகிதனிடத்தில் அன்புகூர்ந்து

அவன் விரும்பிய வரங்களை அளிக்கின்றனர். இவ்வாறு தெய்வானுக்கிரகத்தால் பலம் பெற்ற புரோகிதன் மனிதர்களால் உண்டாகக்கூடிய சகல விரோதத்தையும் திரணமாய்க் கருதுகின்றான். தெய்வபலத்தின் முன் மனித பலம் யாது செய்ய வல்லது? மாணிட சக்திக்கெல்லாம் கேந்திரஸ்தானமாகிய * அரசன்கூட அந்தப் புரோகிதனது வாசலில் கையேந்திக் குறையிரக்கிறானன்றோ? அவனது கருணை நோக்கமே அரசனுக்கு உத்தம சகாயம்; அவனுடைய ஆசீர்வாதமே எல்லாவற்றினும் மேலான திறை. ஒரு சமயம் அரசனை ஆபத்துக்கும் அழிவுக்கும் ஆஸ்பதமான காரியங்களில் தலையிடும்படி ஏவியும், ஒரு பொழுது அன்பும் ஞானமும் நிறைந்த மந்திராலோசனை கூறி அவனுக்கு ஆப்த மித்திரனாய் நின்று உதவியும், ஒருகால் அரசனை எளிதிற் சிக்கச் செய்ய வல்ல நுட்பமான ராஜதந்திர சூழ்ச்சி வலையை விரித்தும், புரோகிதன் பலகாலும் ராஜசக்தியைத் தனக்கு முற்றிலும் வசப்பட்டிருக்குமாறு செய்து கொள்ளுகிறான். இவையனைத்தையும்விட அரசனுக்கு அதிக பயத்தை விளைக்கக்கூடியது யாதெனில், அவனது முன்னோர்களுடையதும் அவனுடையதும் அவனது வம்சத்தாரினதுமான பெயரும் புகழுமே புரோகிதனது லேகினியின் † அனுக்கிரகாதீனமா யிருக்கின்றன. அவனன்றோ இதிகாசம் எழுதவேண்டியவன். அரசன் மகா பிரதாபசாலியாகவும், ஜீவதசையில் அதிகீர்த்தி

* கேந்திரம்=வட்டத்தின்மத்தி, நடு மையம்.

† திறை=கப்பம், லேகினி=எழுதுகோல், எழுத்தாணி, பேனா.

மாகுகவும், பிரஜைகளுக்குத் தாயும் தந்தையுமான பான்மையில் விளங்குபவனுகவும் இருப்பினும், புரோகிதனைத் திருப்தி செய்வியாகுகில், அவனது பிரதாப சூரியன் அவனது மூச்சுடன்கூடவே என்றென்றைக்கும் அஸ்தமித்துப் போய்விடும்; உலகமுழுவதும் கொண்டாடத்தக்க அவனது சகலவிதமான யோக்கியதையும் பெருந்தகைமையும் கடலில் விழும் பனித்திவலைபோல் காலத்தின் மகாகர்ப்பத்தில் அகப்பட்டு அழிந்துபோம். பல வருஷகாலம் தொடர்ந்து நடந்த மகா ஸத்ரம் என்னும் வேள்விகளை அநுஷ்டித்தவர்களும், அசுவமேத முதலிய யாகங்களைச் செய்து, மாரிகாலத்தில் இடைவிடாமற் பொழியும் மழைத்தாரைபோல் புரோகிதர்களுக்குப் புஷ்கலமாய்ச் செல்வத்தை தக்ஷிணையாக வருஷித்தவர்களுமான மன்னர்களின் பெயர்களே புரோகிதர்களின் அநுக்ரஹ விசேஷத்தால் இதிகாச புராணங்களில் பேரொளியுடன் திகழ்கின்றன. தேவர்களுக்குப் பிரியமானவன் (தேவாநாம் ப்ரிய:) என்று கீர்த்திபெற்ற பிரியதரிசி தர்மாசோகனது பெயர்* பிராமண ஜகத்தில் நாமமாத்ரமாகவே நிற்க, பரீக்ஷித்தின் புதல்வனுகிய ஜனமேஜயனுடைய † பெயரோ உலகப் பிரசித்தமாய் விட்டது.

ராஜ்யபரிபாலனத்தின் பொருட்டும், தன் சொந்த சுகபோகத்துக்காகவும், தன் பெருத்த பரிவாரத்தின் போஷணைக்காகவும், எல்லாவற்றினும் முக்கியமாக,

---

* பௌத்தமதத்திற் பிரவேசித்த பிறகு தர்மாசோகன் என்ற பெயர் அசோக மகாராஜனுக்கு இடப்பட்டது.

† மஹாபாரதத்திற் கூறிய மகாஸர்ப்பயாகம் செய்தவன்.

புரோகிதவர்க்கத்தைத் திருப்தி செய்விக்கவேண்டி, அதற்குப் பூரிதக்ஷிணையை வாரிவாரி வழங்கும் பொருட்டும், அரசனானவன், பூமியினின்றும் ஞாயிறு ஈரத்தை உறிஞ்சுவதுபோல், தனது குடிமக்களின் செல்வப் பெருக்கத்தை இடைவிடாமல் வடித்தவண்ணமாயிருக்கிறான். இதில் அரசனுக்குப் பிரதான இரையாயிருப்பவர்கள், காமதேனுவைப்போல் அமோகமாய்ப் பால் தரும் கறவைப் பசுக்களாகிய வைசியர்களே.

வரிதண்டல், ராஜ்யப்பாதுகாப்பு, முதலிய துரைத்தன நிர்வாக காரியங்களிலே ஹிந்து க்ஷத்திரிய அரசர்களின் ஆளுகையிலும்சரி, பௌத்த பரிபாலனத்திலும் சரி, தங்கள் மதாமதங்களைத் தெரிவிக்கச் சாதாரண பிரஜைகளுக்கு எவ்வித அதிகாரமாவது இருந்ததாகத் தெரியவில்லை. யுதிஷ்டிரன் வாரணாவதத்தில் வசிக்கும்போது வைசியர்களின் வீடுகளுக்கும் சூத்திரர்களின் வீடுகளுக்குங்கூடச் சென்றிருப்பது உண்மையே. ஸ்ரீராமபிரானுக்கு இளவரசு பட்டம் சூட்ட வேண்டுமென்று பிரஜைகள் பிரார்த்திருப்பதும் வாஸ்தவமே. அதுமட்டுமன்று. அவர்கள் சீதாபிராட்டியாரின் ஒழுக்கத்திலும் குற்றம் கூறி, அந்தத் தேவியைக் காட்டுக்கு அனுப்புவதற்காக ரகசியமாய்ச் சூழ்ச்சிகளும் செய்திருக்கிறார்கள். ஆனால், பிரத்தியக்ஷ சம்பந்தமாய், ராஜ்ஜிய பத்ததிகளைச் சேர்ந்த எந்த விஷயத்திலும் பிரஜைகளுக்கு நேராக அதிகாரம் உண்டாயிருக்கவில்லை. பிரஜாசக்தியானது பிரத்தியக்ஷ சம்பந்தமின்றி, எவ்வித கட்டுப்பாடான ஒழுங்கையும் அநுசரியாமல், கிரமவீனமான வழிகளில் தலைகாட்டமன்று

டிக்கொண்டிருக்கிறது. இத் தகைய சக்தி இருக்கிற தென்னும் அறிவே ஜனங்களுக்கு இன்னும் புத்தி பூர்வகமாய் உண்டாகவில்லை. ஆகவே ஒன்றுகூடி உழைப்பதற்குப் பயன்படும்படி அந்தச் சக்தியை உருப்படுத்துவதற்கான முயற்சியாவது, அப்படிச் செய்யவேண்டுமென்னும் சங்கற்பமாவது அவர்களிடத்தில் இல்லை; மேலும் சொற்பமாகவும் ஒன்றோடொன்று சேராமலும் சிதறிக்கிடக்கும் தனித்தனியான சக்திகளை ஒன்றுபடுத்தி, அந்த ஒற்றுமையினின்றும் பிரசண்டமான பலத்தை உற்பவிக்கச் செய்வதற்குச் சாதனமாகக் கூடிய அப்படிப்பட்ட திறமையும் சாமர்த்தியமும் முற்றிலும் இன்மையாகவே இருக்கிறது.

இதற்குக் காரணம் சரியான சட்டங்கள் இல்லாமையா? அன்று; காரணம் அதுவன்று. அரசியலின் பற்பல பிரிவுகளையும் நடாத்துதற்கென்று பிரத்தியேகமாயும் பரிஷ்காரமாயும் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களும் பத்ததிகளும் எத்தனையோ இருக்கின்றன. அரசிறை தண்டல், சைனிய நிருவாகம், நீதி பரிபாலனம், தண்டனை விதித்தல், வெகுமதி அளித்தல் என்பவை போன்ற ஒவ்வொன்றுக்கும் சாங்கோபாங்கமாய்ச் சட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவையெல்லாவற்றுக்கும் அடியில் இருப்பது—ரிஷிவாக்கு, தெய்வசக்தி, ஞானதிருஷ்டிபெற்ற ரிஷிமுகமாய் பிரவர்த்தித்த பகவதாக்கினை. இந்தச் சட்டங்களுக்குக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு விரியுந் தன்மையாகிய **ஸ்திதிஸ்தாபகத்துவம்** முற்றிலும் இல்லையென்றே வெகுவாய்க் கூறலாம். இத் தகைய நிலைமை

யில், பிரஜைகள் பொதுநன்மைக்குற்ற எக் காரியத்தை யாவது நிறைவேற்றுதற்பொருட்டுத் தம்மில் ஒன்று கூடி ஐகமத்தியத்துடன் முயலக் கற்றுக்கொள்வதற் காகிலும், அரசனால் பிரஜைகளிடத்திலிருந்து தண்டல் செய்யப்படும் தனராசியில் ஜனசாமானியத்துக்கு உரிமை யுண்டென்னும் எண்ணம் உதிப்பதற்கு அனு குணமான சமவாய புத்தி விசேஷத்தை அடைவதற் காகிலும் கருவியாயிருக்கக்கூடிய தாகவோ, அல்லது ராஜாங்கத்தின் வரவு செலவுகளின் விஷயமாய் அதிகா ரம் செலுத்துவதற்குப் பிரதிநிதித்வமுறையை அநுச ரித்து உரிமைபெறவேண்டுமென்னும் உற்சாகத் தீயை மூட்டக்கூடியதாகவோ உள்ள எவ் விதக் கல்வியையும் கற்பதற்குப் பிரஜைகளுக்கு வழியே இல்லை. அப்படிப் பட்ட காரியங்களைச் செய்ய அவர்கள் ஏன் விரும்ப வேண்டும்? அவர்களுடைய யோகக்ஷேமங்களை வகிக்க திவ்யதிருஷ்டி பெற்ற ரிஷி பொறுப்பேற்றிருக்க வில்லையா?

அன்றியும், இந்தச் சட்டங்களெல்லாம் ஏட்டில் இருக்கின்றன. ஸ்மிருதிகளைப் புஸ்தகங்களில் முறை வகுத்து வைப்பதற்கும் அவற்றை ஆசரணைக்குக் கொண்டுவருவதற்கும் இடையில் மஹத்தான பேதம் இருக்கிறது. ஆயிரம் அக்னிவர்ணர்களுக்குப் பிறகு* ஒரு ராமசந்திரன் அவதரிக்கிறான். சண்டாசோக

---

* அக்னிவர்ணன்—சூரியகுலத்தரசன்; இவன் பிரஜை களின் க்ஷேமத்தைக் கவனியாமல் இரவும் பகலும் அந்தப் புரத்திலேயே காலங்கழித்துக் கடைசியில் அதி விஷய போகத் தினால் உண்டான க்ஷயரோகத்தினால் மாண்டான்.

ன்து ஒழுக்கத்தைப் பின்பற்றுகிற பார்த்திவர்கள் பலர். தர்மாசோகர்களோ * அபூர்வம். அக்பரைப் † போன்ற பிரஜாரக்ஷகர்களின் சங்கியை அவரங்க ஜேப்பை நிகர்த்த பிரஜாபக்ஷகர்களின் சங்கியையைவிட மிகக் குறைந்தேயிருக்கிறது.

அரசர்களெல்லாம் யுதிஷ்டிரன், ராமபிரான், தர்மாசோகன், அக்பர் இவர்களைப்போல் தெய்வத்

---

* தர்மாசோகன்—பாரதவருஷத்தை ஏக சக்ராதிபதியாய் ஆண்ட பௌத்த சக்ரவர்த்தியாகிய அசோகன். இவனது காலம் கி. மு. மூன்றும் நூற்றாண்டென்ப. சகோதரர்களைக் கொலை செய்தும், மற்றும் பல கொடுஞ்செயல்கள் இழைத்தும் சிங்காசனம் ஏறியபடியால், இவனுக்கு முதலில் சண்டாசோகனென்று பெயர் உண்டாயிற்று. சிம்மாசனம் ஏறிய ஒன்பது வருஷங்களுக்குப்பின் பௌத்த தர்மத்திற் பிரவேசித்ததன் மேல், இவனது குணம் முற்றிலும் மாறிவிட்டது. பாரத தேசத்திலும் அதற்குப் புறம்பான நாடுகளிலும் பௌத்த தர்மம் விசேஷமாய்ப் பரவியது இவனது முயற்சியினாலேயே. பாரதம், காபூல், பாரஸீகம், பாலஸ்தீனம் முதலிய தேசங்களில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்தூபங்களிலும் ஸ்தம்பங்களிலும் கற்பாறைகளிலும் வெட்டப்பட்டுள்ள சாஸனங்களே இதற்குச் சாக்ஷி. இவ்வாறு இவன் பல தர்மகாரியங்களைச் செய்து ஜீவஹிம்சையை நிறுத்திப் பிரஜைகளை மகிழ்வித்ததனால், பிற்காலத்தில் 'தேவாநாம் பியோபியதஸீ' (தேவாநாம் ப்ரிய: ப்ரியதர்ஸீ=தேவர்களுக்குப் பிரியனான பிரியதரிசி) தர்மாசோகன் என்று பிரஸித்தியடைந்தான்.

† அக்பர்—மொகலாய சக்ரவர்த்திகளுக்குள் சிறந்தவன்; ஹிந்துக்களையும் மகமதியர்களையும் பாரபக்ஷமின்றி நேசித்து தர்மபரிபாலனம் செய்தவன்.

தன்மை பொருந்தியவர்களாயிருந்து, அவர்களின் ஆளுகையில் பிரஜைகள் அஷ்ட ஐசுவரியத்தையும் அநுபவித்துக்கொண்டு க்ஷேமமாய் வாழ்ந்து, ஆள்வோரால் பெற்றபிள்ளைகளைப்போல் பக்ஷமாய் நடத்தப் பெற்றுவந்தாலும், யாது பயன்? எப்போதும் இன்னொருவனால் உணவு ஊட்டப் பெறுகிறவனுடைய கையானது வரவரத் தன் வாயிற் சோற்றையெடுத்துச் செலுத்தும் சக்தியையும் இழந்துவிடும் அன்றோ? அவ்வாறே, சகல விஷயங்களிலும் பிறருடைய பாதுகாப்பில் ஒருவன் சதா இருந்து வருவானாகில், அவனது தற்காப்புத் திறமானது ஒருகாலும் பூர்ணமாய் வளர்ச்சியடையாது. எப்போதும் சிசுவைப்போல் தாய்தந்தையரால் வளர்க்கப் பெற்று வந்தால், மிக்க திடகாத்திரனான வாலிபன் கூடச் சிசுவாகவே இருப்பான். தெய்வத்தன்மை பொருந்திய வேந்தராலே எப்போதும் ஆளப்பெற்று, தங்களது யோகக்ஷேமங்களை அவர்களின் கையில் ஒப்புவித்துவிட்டு நிர்விசாரமாயிருக்கும் பிரஜைகளுக்குச் சுய ஆட்சியின் தத்துவங்களை அறிந்து கொள்ள ஒருபோதும் சமயம் வாய்க்காது. சகல விஷயங்களுக்கும் அரசனையே அபேக்ஷித்தவர்களாய், பொது நன்மைக்காகவாவது தங்களைக் காத்துக்கொள்வதற்காகவாவது ஒரு சிறிதும் முயற்சியின்றி வாளாவிருக்கும் அப்படிப்பட்ட ஜாதியார் வரவர வீரியமற்றவர்களும சக்தியற்றவர்களும் ஆகிவிடுகிறார்கள். இத்தகைய பராதீனமும் பாதுகாப்பும் நெடுங்காலம் நடைபெற்றுவந்தால், அது அந்த ஜாதியின் விநாசத்துக்கே காரணமாகும்; அதன் அழிவுகாலமும் விரைவில் கிட்டிவிடும்.

மகரிஷிகளின் அலௌகிக ப்ராஜ்ஞையால் ஆவேசிக்கப்பட்ட புத்தி விசேஷத்திலிருந்து உண்டாகிய சாஸ்திரவிதிகளின்படி ஒரு தேசத்தின் ஆளுகை நடைபெறும்பொழுது, அத் தகைய ஆளுகையானது தனிகருக்கும் தரித்திருக்கும், பண்டிதருக்கும் பாமாருக்கும், பார்த்திவனுக்கும் பிரஜைகளுக்கும் ஒருங்கே குறைவற்ற க்ஷேமத்தை உண்டுபண்ணவேண்டு மென்பது நியாயமேயாகும். ஆனல் அந்த சாஸ்திர விதிகளை உலகானுபவத்தில் ஆசாரத்துக்குக் கொண்டுவருவது எவ்வளவு மட்டில் சாத்தியமாயிருந்தது, சாத்தியமாகக் கூடும் என்பதை ஏற்கெனவே ஆராய்ந்திருக்கிறும். ஆளப்படுவோருக்குத் தங்கள் தேசத்தின் ஆளுகையில் அதிகாரம் உண்டென்னும் எந்த சித்தாந்தமானது ஆதுநிக பாச்சாத்ய ஜகத்தின் * மூலமந்திரமாய் விளங்குகிறதோ, எதன் இறுதியான சொற்பிரயோகம், "இந்த தேசத்தின் பரிபாலனம் ஜனங்களால் ஜனங்களின் நன்மையின்பொருட்டு நடைபெறுதல் வேண்டும்" என்னும் வாக்கியரூபமாய் அமெரிக்கா ராஜ்யத்தின் மகா சாஸனபத்திரத்தில் இடிமுழக்கத்தை நிகர்த்த கம்பீர தொனியோடு எதிரொலியிட்டதோ, அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்தக் கொள்கை நமது புராதன பாரததேசத்தில் முற்றிலும் அறியப்படாமலிருந்த தென்று சொல்வதற் கில்லை. தேச முழுமையிலும் சிதறுண் டிருந்த சிறு சிறு சுதந்திர சமஸ்தானங்கள் பலவற்றை யவனரெனும் கிரீஸ் தேசத்துப் பிரயாணிகள் பார்த்துப்போய்

* ஆதுநிக பாச்சாத்ய ஜகத்=தற்காலத்து மேற்றிசையுலகம், அதாவது ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்கள்.

எழுதியிருப்பது மன்றி, பௌத்த நூல்களிலும் அவற்றின் பிரஸ்தாபம் காணப்படுகிறது; ஜன அங்கீகாரம் பெற்ற ஆளுகை முறையின் முளையானது கிராம பஞ்சாயத்து ரூபமாக வாவது இருந்த தென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அது பாரத தேசத்தில் இன்னும் பல விடங்களில் காணப்படுகிறது. ஆனல் அந்த முளை எப்போதும் முளையாகவே இருந்தது. அந்த விதை, நிலத்தில் நடப்பட்ட போதிலும் விருக்ஷமாக ஒரு போதும் ஓங்கி வளர வில்லை. இந்தச் சுய ஆட்சிக் கொள்கை ஒருபோதும் கிராம பஞ்சாயத்து முறையென்னும் கர்ப்ப தசையைக் கடந்து ஜன சமாஜத்துக்குள் விரிந்து பரவவில்லை.

மத சமாஜங்களில் பௌத்த மட வாசிகளாகிய சன்னியாசிகளுக்குள்ளே சுய ஆட்சிக் கொள்கை பூரண அபிவிருத்தியடைந்திருந்த தென்பதற்குப்போதிய அத்தாட்சிகள் இருக்கின்றன. இப்போதும் "நாகா" சன்னியாசிகளுக்குள் பஞ்சாயத்து முறையில் அமைந்த சுய ஆட்சி தத்துவம் எவ்வளவு ஒழுங்காய் நடைபெற்று வருகிறதென்பதையும், அவர்களுக்கு இந்த ஐவர் ஆட்சியில் எவ்வளவு மதிப்பு உண்டாயிருக்கிற தென்பதையும், ஒவ்வொரு நாகா சன்னியாசிக்கும் தனது சாகைக்குள் எவ்வளவு வியஷ்டி சுதந்திரம் ஏற்பட்டிருக்கிற தென்பதையும், அவர்களது சமாஜத்துக்குள் எவ்வளவு சிறந்த சமவாய சக்தியும் ஒருமித் துழைக்கும் ஆற்றலும் ஏற்பட்டிருக்கின்றன வென்பதையும் பார்க்க மிக்க வியப்பா யிருக்கிறது.

பௌத்த மதம் பிரசாரமென்னும் மகாப் பிரளயம்

இந்த தேசத்தில் உண்டான காலத்தில், புரோகித சக்தி அதில் முழுகி அழியவும், ராஜன்ய* சக்தி தழைத் தோங்கியது. பௌத்த குருமார் சர்வசங்க பரித்தியாகம் செய்து, லௌகிக விவகாரங்களிற் பற்றற்று, மடங்களில் வதியும் சன்னியாசிகளாயிருப்பவர். அரசர்களை 'சாபேந சாபேநவா' † என்றபடி சாபத்தினாலாவது மந்திராஸ்திரப் பிரயோகத்தினாலாவது பயமுறுத்தித் தங்கள் அதிகாரத்துக்குள்ளாக்கிக்கொள்ளவேண்டுமென்னும் விருப்பமாவது முயற்சியாவது அவர்களுக்கு உண்டாகவில்லை. அப்படி எங்காவது உண்டாயிருந்தாலும், அஃது நிறைவேறுவது இப்போது அசாத்தியமாய்விட்டது. ஏனெனில், பௌத்த மதமானது 'ஹவிர்புக்கு'கள் என்னப்பட்ட அவியுண்ணும் அமரர்களின் சிம்மாசனங்களை ஆட்டமுறச்செய்து, அவர்களைச் சுவர்க்க பதவிகளிலிருந்து கீழே தள்ளிவிட்டது. புத்தத்துவமடைந்த நரதேவனுடைய திருவடிகளில் பூசனை புரிய 'நெருங்கினர், நெருங்கிப்புக்கு, நீங்குமின், நீங்குமின்' எனத் 'தேன்நுகர் அளியின் மொய்க்கும்' எத்தனையோ நூற்றுக்கணக்கான சதுர்முகன்,‡ சதமகன்¶ முதலிய தேவர்களின் சுவர்க்க பதவிகளைவிடப் புத்தத்துவப் பிராப்தியே சிறந்ததென்னும்

---

* ராஜன்யன் = ராஜா, க்ஷத்திரியன்.

† "சரந்தரு சாபமல்லால் தடுப்பரும் சாபம் வல்ல" என்ற கம்பராமாயண பிரயோகத்தையும் நோக்குக. பாலகாண்டம், அகலிகைப்படலம், ருரு-ம் பாட்டு.

‡ சதுர்முகன் = நான்முகன், பிரமன்.

¶ சதமகன் = நூறு வேள்விகள் செய்தவன், இந்திரன்.

கொள்கை மேலிட்டது. இந்தப் புத்தத்துவத்தை யடைய மனிதனுய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் அதிகாரமுண்டு; அது இந்த ஜன்மத்திலும் எல்லோராலும் அடையக் கூடியதே. இவ் வாருக, தேவர்களுக்கு எப்போது தாழ்வு நேர்ந்ததோ, அப்போதே அவர்களின் ஆதரவைப் பெற்ற புரோகிதர்களின் பிரதிஷ்டையும் போய்விட்டது.

அதனுல், ராஜ சக்தி யென்னும் மகாபலம் பொருந்திய யாகக்குதிரையின் கடிவாளமானது இனிப் புரோகிதனது திடமான பிடிக்குள் நிலயாமல் நழுவிவிடவே, அக் குதிரை இப்பொழுது தங்குதடை யின்றி எதேச்சையாகத் திரியக்கூடிய தாயிற்று. இந்த யுகத்தின் சக்திகேந்திரமானது ஸாமகா்யிகளும் * யஜுர்யாஜிகளுமான † புரோகிதரிடத்திலாவது, ஒருவருக் கொருவர் சம்பந்தமின்றித் தம் தம் சிறு சிறு சுதந்திர சமஸ்தானங்களில் அரசு புரியும் க்ஷத்திரிய வேந்தர்களிடத்திலாவது நிலை கொள்ளவில்லை; மற்று, திக்குத் திகந்தங்களிலும் தமது கீர்த்தியை நாட்டிக் கடல் சூழ்ந்த விசாலமான நிலவலய மெங்கணும் தடுக்கவொண்ணுத ஆஞ்ஞாசக்கரத்தைச் செலுத்தி அரசுபுரிந்த சக்ரவர்த்திகளிடத்திலேயே இந்த யுகத்தின் மானவ சக்தி கேந்திரம் நிலைகொண்டது. இந்த யுகத்தின் நேதாக்கள் ‡ முன்போல் வசிஷ்ட விசுவாமித் ராதிய ரல்லர். மற்று,

* ஸாமகாயி=சாமவேத மந்திரங்களைப் பாடுகிறவன்.

† யஜுர்யாஜி=யஜுர்வேத விதிப்படி யாகம் செய்கிறவன்.

‡ நேதா=வழிகாட்டி, தலைவன்.

சந்திரகுப்தன், தர்மாசோகன் முதலிய ஸம்ராட்டு களே.* பௌத்தயுகத்தில் ஏகசக்ராதிபதிகளாய்ச் செங் சோலோச்சிய சம்ராட்டுகளைப்போல் பாரத நாட்டை மகோன்னத நிலைக்குக் கொண்டுவந்த மன்னவர் மற் றெக்காலத்தும் பாரத சிங்காசனத்தில் ஏறினதில்லை. இந்த யுகத்தின் இறுதியில் தற்கால ஹிந்து மதத்தின் அபிவிருத்தியும், ராஜபுத்ரசக்தியின் எழுச்சியுமே முக்கி யமான நிகழ்ச்சிகள். பௌத்த மதம் க்ஷீணகதியடைந்து, ராஜபுத்திர சக்தி தோன்றவும், பாரத ஸாம்ராஜ்பத் தின் செங்கோல் தன் அகண்ட பிரதாபத்தை இழந்து, மீண்டும் சத கண்டங்களாகப் பிளவுண்டு சக்தியற்ற வர்களான சிற்றரசர்களின் கையிற் சிக்கிக்கொண்டது. இத் தறுவாயில் பிராமண (புரோகித) சக்தி மறுபடியும் தலையெடுத்து ராஜசக்தியினிடம் முன்போல் பகைமை பாராட்டாது, இச் சமயம் அதற்கு அநுகூலமாகவே பிர வர்த்திக்க முயன்றது.

புரோகித சக்திக்கும் ராஜ சக்திக்கும் இடையில், வைதிக காலத்தில் தொடங்கிப் பின்னர் பல தலைமுறை யளவும் வளர்ந்து, கடைசியில் ஜைனபௌத்த விப்லவ † நிகழ்ச்சிகளிலே முற்றி வைரமேறிய நெடுங்கால வழக்கு இந்தக் காலச் சுழற்சியில் முற்றிலும் ஒழிந்து பட்டது. இப்பொழுது இவ் இரு வலிய சக்திகளுக்கும் பரஸ் பரம் நேசம் ஏற்படலாயிற்று. ஆனால் இப்போது, முன்னைய அரசரின் அந்தப் பிரதாப க்ஷாத்ர வீரியமும் ‡

* ஸம்ராட் = ஏகாதிபத்தியமுள்ள மகாராஜன்.

† விப்லவம் = புரட்சி.

‡ க்ஷாத்ர = க்ஷத்திரிய.

இல்லை, பிராமணருக்குச் சிறப்பாய் விளங்கிய அந்தப் பிரம்ம தேஜஸும் இல்லை. இருதரத்தாரும் பூர்வீகமான தத்தம் இயற்கைப் பெருமையை இழந்து விட்டனர்.

உபய சக்திகளுக்குள்ளும் உண்டான இந்த நூதன கூட்டுறவானது பரஸ்பரமான சுயப்பிரயோஜனங்களை நிறைவேற்றிக் கொள்வதில் சகஜமாகவே பிரயோகிக்கப் பெற்று, இரு சக்திகளுக்கும் பொது சத்துருக்களாகிய அக் காலத்துப் பௌத்தர்களை வேரறுத்தலாகிய காரியங்களில் தன் வீரியத்தை யெல்லாம் செலுத்தி வலியிழந்தது. அத்தகைய சக்தி யைக்கியத்தினால் விளையக்கூடிய தீமைகளான—சாமானிய ஜனங்களின் இரத்தத்தை உறிஞ்சுதல், பகைவர்மேல் பழிதீர்த்தல், பர தனத்தை அபகரித்தல் முதலான கொடுந்தொழில்களில் அழுந்தி, அவர்கள் புராதன மன்னர்களின் ராஜசூயாதி வைதிக வேள்விகளைப் போன்ற கர்மங்களைச் செய்ய வீணே முயன்று, அவற்றைக் கேவலம் நகைப்புக் கிடமான கோமாளிக் கூத் தாக்கினர். இதன் பலிதமாக, கோட்சொல்லிகளும் முகஸ்துதி செய்வோருமான பரிவார கோஷ்டிகளால் கைகால் கட்டப்பெற்றவர்களாய், மந்திர தந்திர படாடோபத்துடன் கூடிய பிரம்மாண்ட ரூபங்கொண்ட அனந்தமான கர்ம காண்ட வலையிற் சிக்குண்டுபோய், மேற்குப் பக்கத்திலிருந்து படையெடுத்துவந்த முகம்மதியர் ஆடிய வேட்டையில் எளிதில் விழுந்துபட்டனர்.

ஏந்தப் புரோகித சக்தியானது ராஜ சக்தியைத் தன் வசமாக்கிக்கொள்ள வைதிக யுகத்தில் தொடங்கிப் பல சகாப்தங்கள் வரையில் போராடி வந்ததோ, க்ஷாத்ர

பலத்தை எதிர்த்து நின்ற அந்தப் பிராமண பிரா தானியத்தைப் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் இந்தப் பூலோகத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் தமது அமானுஷமான பிரஜ்ஞாவிசேஷத்தினால் அடக்கிவைத்தார். அந்தப் பிராமண சக்தியானது ஜைன பௌத்த மதங்களின் புரட்சிமேலிட்டகாலத்தில் பாரததேசத்தின் கர்மக்ஷேத்திரத்திலிருந்து* பெரும்பாலும் துடைத்துவிடப் பட்டது; அப்படி எவ்விடத்திலாவது தலை காட்டினாலும், பிரபலமான வைரி மதங்களுக்குத் தலை வணங்கி ஏதோ ஒரு வாறு பிராணனை மாத்திரம் வைத்துக்கொண்டிருந்தது. இப்பொழுதோ அதே பிராமண சக்தி, மிஹிரகுலாதி† ராஜபுத்திர வம்சத்தார் பாரத தேசத்தை ஆளத் தொடங்கின வுடனே, தனது பூர்வ மகிமையை மீளவும் ஸ்தாபித்துக்கொள்ளக் கடைசிப் பிரயத்தனஞ் செய்தது. அந்தப் பிராதானியத்தை நிலைநாட்ட இவ்வாறு முயன்றதில், அது, மத்திய ஆசியாவிலிருந்து புதிதாய்ப் பிரவேசித்த பர்ப்பர (அநாகரிக) ஜாதியாரின் பயங்கரமான கூட்டத்தின் பாதங்களில் அடிமைப்பட்டு, அவர்கள் பிரீதியின் பொருட்டு அவர்களின் அஸஹ்யமான சடங்குகளுக்கும் கருமங்களுக்கும் ஸ்வமதத்தில் இடங்கொடுத்தது. அன்றியும், இந்தப் பிராமணர்கள் கல்வியறிவற்ற விதேசிய பர்ப்பர ஜனங்களை எளிதில் ஏமாற்றுவதற்குத் தங்கள் முழுச் சக்தியையும் பிரயோகித்து, நூதன மந்திர தந்திரங்களைக் கற்பனை

* கர்மக்ஷேத்திரம் = தொழிற் றுறை, வினைக் களம்.

† மிஹிரகுலன் = ராஜபுத்திர ஜாதியின் மூலபுருஷர்களில் ஒருவன்.

செய்து, நவீன கருமானுஷ்டானங்களை ஆசாரணைக்குக் கொண்டுவந்து, இத் தகைய காரியங்களால் கடைசியாகத் தாங்களும் தங்கள் பூர்வீகமான வித்தையையும், வீரியத்தையும், தேஜஸ்ஸையும் பரிசுத்தமான ஒழுக்கத்தையும் இழந்து, இவ் வாறாக, ஆரியாவர்த்த முழுவதையும் அதி நீசமும், அதி அஸஹ்யமும், அதி கோரமும் விகாரமுமான வாமாசாரமென்னும் ஆழ்ந்த சுழலில் அமிழ்த்திவிட்டார்கள். இத் தகைய அருவருப்பான அநுசாரங்களையும் மூட நம்பிக்கைகளையும் ஏற்படுத்தினதன் தவிர்க்கமுடியாப் பயனாக, அவர்கள் தங்கள் சொந்த ஆந்தரிக* பலத்தையும் பெருமையையும் சீக்கிரத்தில் இழந்து, துர்ப்பலத்திலும் துர்ப்பலமான நிலைமைக்கு வந்து விட்டார்கள். இந்த நிலைமையில் இவர்களின் சக்தியானது மேற்குப் பக்கத்திலிருந்து படையெடுத்து வந்த முகம்மதிய சேனையாகிய சண்டமாருதத்தின் ஸ்பரிசமாத்திரத்தில் ஆயிரந் துண்டுகளாகப் பிளந்து முறிந்து விழுந்து பட்டதும் ஓர் ஆச்சரியமா? அந்த மகத்தான பிராமண சக்தி இவ் வாறு வீழ்ச்சியுற்றது! மீண்டும் எக் காலத்திலாயினும் அது தலை யெடுக்குமோ என்னவோ, யார் அறிவார்?

இனி முகம்மதியரின் ஆளுகையில், புரோகித சக்தி தலை யெடுப்பது முற்றிலும் அசம்பவம். முகம்மது நபி சர்வ விதத்திலும் இந்த சக்திக்கு விரோதியாய், இதை அடியோடு அழிப்பதற்கு வேண்டிய தர்ம நியமங்களையும் சட்டங்களையும் தம்மா லான மட்டிலும் ஏற்படுத்தி வைத்தார். முகம்மதியரின் ஆளுகை

---

* ஆந்தரிக=உள்ளுறையான.

யில் அரசனே பிரதான புரோகிதன்; மத விஷயங்களில் அவனே முக்கிய நியாமகன். அவன் சக்ரவர்த்தியாகும்போது அகில முஸ்லிம் ஜகத்துக்கும் தானே சகல விஷயங்களிலும் முழுமுதற் றலைமை வகிக்கலாமென்று ஆசை கொண்டிருப்பவன். முகம்மதியர்களுக்கு யூதர்களாவது கிறிஸ்தவர்களாவது முற்றிலும் பகைக்கத் தக்கவரல்லர்; அவர்கள் அற்ப விசுவாசமுள்ளவர்களென்று மாத்திரம் எண்ணப்படுவார்கள். ஹிந்துக்களோ அப்படியல்லர். ஹிந்துக்கள் பதுமைகளை வணங்குகிறவர்களென்பதும் 'காபிரிகள்' (பாஷண்டர்கள்) என்பதும் அவர்களின் அபிப்பிராயம்; ஆகவே இப் பிறவியில் அவர்கள் கொலைசெய்யப்படுவதற்குரியவர்; பர காலத்திலும் நித்திய நரகமே அவர்களுக்குக் கதி; ஆதலின், இந்தக் 'காபிரி' களின் குருமாராகிய பிராமணர்களை ஏதோ ஒருவிதமாக வாழ்நாளைக்கழித்து அந்திய காலத்துக்காகக் காத்திருக்கும்படி விட்டுவைப்பதே அவர்களுக்கு முகம்மதிய அரசர் அதிகமாய்ச் செய்யக்கூடிய உபகாரம். சிற்சில சமயங்களில் இதுகூட அமிதமான காருண்யமெனக் கருதப்பட்டது! எந்த அரசனுக்காவது மதாவேசம் சிறிது அசாதாரணமாய் விருத்தியாகி விட்டாலோ, உடனே வேண்டிய சன்னகம் செய்யப்படும் 'காபிரி' வதம் என்னும் மகா யஜ்ஞம் செய்வதன் பொருட்டு.

இப்பொழுது ஒருபுறம் ராஜ சக்தியானது வேற்று மதத்தையும் வேற்றுசாரங்களையும் அனுஷ்டிக்கும் அரசர்களிடம் நிலைகொள்ள, மற்றொருபுறம் புரோகித சக்தியானது சமாஜத்தைத் தர்ம சாஸ்திரங்களைக்கொண்டு

அடக்கியாளும் அதிகார ஸ்தானத்திலிருந்து அடியோடு பெயர்ந்து போய்விட்டது. மனுவாதி தர்ம சாஸ்திரங்களின் ஸ்தானத்தில் குரான் திருமுறையும் அதிற் கண்ட தர்மங்களும் தலை காட்டி நிற்க, தேவபாஷையாகிய சமஸ்கிருதத்தின் சிறப்பை அரபியும் பார்ஸியும் கவர்ந்துகொண்டன. வடமொழியானது பராஜிதர்களும்* பகைக்கப்பட்டவர்களுமான ஹிந்துக்களின் மதகிரந்தங்களிலும் ஆசார விவகாரங்களிலும் மாத்திரம் வழங்கிக் கிடக்கவேண்டியதான நிலைமைக்கு வந்து விட்டபடியால், அது பிரதிஷ்டை யிழந்த புரோகிதன் கையில் நித்திய கண்டமும் பூரணுயுளுமாய் ஏதோ ஒருவாறு உயிர் பிழைத்து வந்தது. இனிப் பிராமண சக்தியின் அஸ்திசேஷமாகிய புரோகிதன் வேறுகதியின்றி விவாகாதிசாமானிய குலாசார கர்மங்களைச் செய்விப்பதையே தனக்குக் கடைசியான ஜீவனோபாயமாக வைத்துக்கொண்டு காலக்ஷேபஞ் செய்து வந்தான்; அதுவும் முகம்மதிய பிரபுக்கள் கருணை கூர்ந்து அனுமதி தரும் காலம் வரையிலும் அளவு மட்டுக்கும்தான்.†

---

* பராஜிதர்=வெல்லப்பட்டவர்.

† இக்கருத்தைப் பின்வரும் சுலோகம் நன்கு விளக்குகின்றது: அஸதாம் த்ஹர்ம புத்த்ஹிர் சேத், ஸதாம் ஸந்தாபகாரணம்; உபோஷிதஸ்ய வ்யாக்ஹ்ரஸ்ய பாரணம் பசுமாரணம்.

(இ-ள்.) தீயோர்களுக்கு தர்மபுத்தி உண்டாவது நல்லோர்களின் வருத்தத்துக்கே காரணமாகும்; எப்படியெனில், புலி உபவாசமாயிருந்து பாரணை செய்வதானல், பசுக்களின் மரணம் திண்ணம்.

வேத யுகத்திலும் அதற்கடுத்துப் பிந்திய காலத்திலும் பௌரோகித்ய சக்தியின் உபத்திரவ மிகுதியினால், ராஜ சக்தி சம்பூர்ண விகாசம் அடையக் கூடாது போயிற்று. பௌத்த விப்லவத்தில் பிராமணாதிகாரம் க்ஷீணித்து, ராஜ சக்தியானது பாரத தேசத்தில் மஹோன்னத ஸ்திதி யடைந்த விதத்தைக் கண்டோம். பௌத்த ஸாம்ராஜ்யத்தின் அழிவுக்கும் முகம்மதிய ஸாம்ராஜ்ய ஸ்தாபனத்துக்கும் இடையிட்ட காலத்தில் ராஜபுத்திரர்களின் மூலமாக க்ஷாத்ர சக்தி தலை யெடுக்க முயன்ற விதத்தையும், அந்த முயற்சி நிறைவேறாமற்போன விதத்தையும் பார்த்தோம். இதற்கும் மூலகாரணமா யிருந்தது, வைதிக புரோகிதர்கள் பூர்விகமான கர்மகாண்ட காலத்தை நூதன பிராணத்துடன் மீண்டும் ஸ்தாபிக்கச் செய்த பிரயத்தனமே யென்று சொல்லத் தகும்.

முகம்மதிய அரசர் பௌரோகித்ய சக்தியை மிதித்து நசுக்கி, மௌர்ய குப்த ஆந்திர க்ஷாத்ரபர்* முதலான சக்ரவர்த்தி வம்சங்களின் பூர்வ கீர்த்திச் சிறப்பைப் பெரும்பான்மையும் திரும்ப ஸ்தாபிக்க வல்லவரா யிருந்தனர்.

இவ் வாறு, குமாரிலர், சங்கரர், ராமானுஜர் முதலிய ஆசாரியர்களின் பிரவசன பலத்தையும் சிறிது காலம் வரையில் ராஜபுத்திரர்களின் கட்க பலத்தை† யும் கொண்டு தன் வைரிகளாகிய ஜைன பௌத்தர்களை

* க்ஷாத்ரபர் = Satraps = ஆர்யாவர்த்தத்தையும் கூர்ஜரத்தையும் ஆண்ட பாரஸீக அதிபதிகள்.

† கட்க பலம் = வாள்வலி.

அழித்து, மீண்டும் தலையெடுக்க விரும்பிய பௌரோகித சக்தியானது, முகம்மதியரின் ஆளுகையில் திரும்பவும் விழித்தெழுதலில்லாத நெடுந்துயிலில் அமர்ந்து கிடக்குமாறு செய்யப்பட்டது. இந்த யுகத்தில் துவேஷமும் யுத்தமும் புரோகிதருக்கும் அரசருக்கும் இடையில் உண்டாகாமல், அரசர்களுக்குள்ளாகவே பரஸ்பரம் நேர்ந்தது. இந்த முகம்மதிய யுகத்தின் இறுதியில் ஹிந்து சக்தியானது மறுபடியும் தலையெடுத்து, மஹாராஷ்ட்டிரர், சீக்கியர் இவர்களின் உதவியால் சிறிதுமட்டிலும் ஹிந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்விக்க வல்லதாயிருந்த பொழுதும், அந்தத் திருப்பணியில் பௌரோகித சக்தி விசேஷமான பிராதானியம் வகித்ததாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, பிராமணர்களை சீக்கியர் தம் மதத்தில் சேர்த்துக்கொண்டபோது, அவர்களது பிராமண சின்னங்களை முதலில் பகிரங்கமாய் எடுத்துவிடச் சொல்லிப் பிறகு தங்கள் சம்பிரதாயத்தின் விசேஷ லக்ஷணங்களை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தி வந்தனர்.

இங்ஙனம் இவ் இரண்டு சக்திகளுக்கும் நெடுங்காலம் போராட்டம் நடந்தபிறகு, அன்னிய மதாவலம்பிகளான அரசர்களால் ராஜ சக்திக்குக் கடைசியில் உண்டான வெற்றியானது பாரத பூமியில் பல நூற்றாண்டுகள் வரையில் பிரதித்தொனி செய்து நின்றது. ஆனால் முகம்மதிய யுகத்தின் இறுதியில் மற்றோர் அபிநவ சக்தி மெல்ல மெல்ல அரங்கமேறி, பாரத ஜகத்தின் விவகாரங்களில் தன் பிரபாவத்தைப் பரவச் செய்யத் தொடங்கியது.

இந்த சக்தியானது பாரத பூமியில் 'பார்க்கு மிடமெங்கு மொரு நீக்கமற நிறைந்து' நிலை பெற்றதைக் கண்டு பாரதவாசிகள் ஏற்கெனவே ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தபோதிலும், அது அவ்வளவு புதுமையாகவும், அதன் பண்பும் பிரவிருத்தியும் அவ்வளவு அகோசரமாகவும், அதன் பிரபாவம் அவ்வளவு பிரசண்டமாகவும் இருப்பதனால், அதன் மகிமையை அவர்கள் இன்னமும் தெளியத் தெரிந்துகொண்டார்களில்லை. அந்த சக்தி இன்னதென்பது பாரதவாசிகளுக்கு நன்ருய்த் தெரிந்தே யிருக்கிறது.

ஆங்கிலேயர் பாரத பூமியைக் கைப்பற்றியதைப் பற்றி இப்போது நாம் பேசுகிறோம்.

தொன்று தொட்டு பாரத வருஷத்தின் ஒப்பற்ற தனதானியச் சிறப்பானது, வலிபெற்ற விதேசியரின் உள்ளங்களில் இந் நாட்டைக் கவரவேண்டு மென்னும் பேராவலைப் பெரிதும் மூட்டி வந்தது. உள்ளபடியே பாரத நாட்டைப் பன்முறையும் பரதேசத்தார் வென்றிருக்கின்றனர். அப்படி யாயின், பாரத நாட்டை ஆங்கிலேயர் கைப்பற்றின செய்தி பாரதவாசிகளுக்கு மிகப் புதுமையாகவும் வியப்பாகவும் தோற்றிய தென்று சொல்லக் காரணமென்ன ?

அத்யாத்ம சக்தியினுலும், மந்திர மகிமையினுலும், சாஸ்திர ஞானத்தினுலும் வல்லமைபெற்று, சாபத்தையே ஆயுதமாகக்கொண்டு, சம்சாரப் பற்றற்று, நிற்க நிழலில்லாத தவசியின் புருவநெறிப்பைக் கண்ட மாத்திரத்தில் வணங்காமுடி மன்னர்கூடப் பயந்து நடுநடுங்குவதைத் தொன்று தொட்டுப் பார்த்திருக்கிறது பாரத

தேசம். சைனிய பலமும் சஸ்திர பலமும் பெற்ற மகா வீரர்களாகிய அரசர்களின் தடுக்கவொண்ணாத சௌரியத்தையும் ஏகாதிபத்தியத்தையும் கண்டு பிரஜாவர்க்கமானது சிங்கத்தின் எதிர்ப் பட்ட ஆட்டு மந்தையைப் போல் அடங்கி ஒடுங்கி வணங்கிக் கிடப்பதையும் பார்த்திருக்கிறது இந்த பாரத தேசம். ஆனால், எந்த நாட்டின் வைசிய வகுப்பார், தாம் குபேரசம்பத்துடையவர்களாயிருந்தும், மகாராஜாவுக்கு மாத்திரமே யன்றி, ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர் எவர்க்குமே பயபக்தியுடன் முழந்தாட் படியிட்டு அடங்கி யொடுங்கிப் பணிவுடன் தலை வணங்குவது மரபா யிருந்ததோ, அத் தகைய நாட்டின் வைசியர்களிற் சிலர் ஒன்று கூடி வியாபாரத்தை முன்னிட்டு அகாதமான கடல்களையும் மகா சமுத்திரங்களையும் கடந்து, கண்ணுக் கெட்டாத வெகு தூரத்திலுள்ள அன்னிய தேசத்துக்கு வந்து, கேவலம் தமது புத்தி நுட்பத்தினாலும் செல்வ வன்மையினாலும், அத் தேசத்தின் நிலைபெற்ற புராதன ஹிந்து முகம்மதிய ராஜ வம்சங்களைத் தம் வச மாக்கிக்கொண்டு, முடிவில், படிப் படியாய் அவ் வம்சத்தார்களைத் தந்திரோபாயங்களால் சூத்திரப் பாவைகளைப்போல் தாம் இழுத்த வண்ணம் ஆடும்படி செய்யவல்லவர்களாயிருத்தலும்,— அதுமட்டுமன்றி, தம் சுயநாட்டு ராஜ்ஜியாதிகாரிகளின் ஒத்தாசையையும் தம் செல்வத்தினால் விலைக்கு வாங்கி, அந் நாட்டின் படை வலியையும், வீரத்தையும், கல்வித் திறத்தையும் தம் செல்வ விழுப்பத்துக் குதவும் வலிய சாதனமாக அழைத்துக்கொள்ளுதலும்,—எந்த நாட்டின் கவிச்சக்ரவர்த்தியினது தெய்வீகமான கற்பனா

சக்தியினால் உற்பவிக்கப்பெற்ற செருக்குற்ற ஒரு பிரபு தன்னை அவமதித்த ஒரு சாமானிய மனிதனை நோக்கி "எட்டிப்போடா, குட்டிச்சுவரே! உயர்குலத்தானையோ எதிர்க்க நீ துணிந்தனை?"* என்று கடிந்து கழறினனே, அந்த நாட்டின் பிரபு வம்சத்துப் பிற்சந்ததியார், கூடிய விரைவில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியென்னும் வர்த்தக சங்கத்தின் ஊழியத்தில் அமர்ந்து பாரத தேசத்துக்கு வர மனமிசைவது மாத்திர மன்றி, அப்படிப்பட்ட பதவி கிடைப்பதே இப்பூவுலகில் பெறுதற் கரிய பரமபாக்கியமெனக் கருதுவதுமாகிய இத்தகைய அதிசயமான காட்சியானது பாரத தேசம் முன் ஒருபோதும் காணாத புதுமையே என்க! ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களும் மேலிட்டோ குறைந்தோ இருப்பதை அனுசரித்துப் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வர்ணங்கள் எல்லாத் தேசங்களிலும் எக்காலத்திலும் சகல நாகரிக சமாஜங்களிலும் உண்டாயிருக்கின்றன. கால கதியினாலும், தேச பேதத்தினாலும் இந் நான்கு வர்ணத்தாரின் ஸங்கியையும் சக்தியும் அந்தந்தக் காலத்தில் மாறிக்கொண்டே யிருக்கின்றன. சில தேசங்களிலே இவ் வர்ணங்களிலே் ஒன்று மற்றதைக் காட்டிலும் சங்கியையிலும் செல்வாக்கிலும் மேலிட் டிருக்கக்கூடும்; ஒவ்வொரு காலத்தில் ஒவ் வொரு வகுப்பார் மற்ற வகுப்பாரைவிட அதிக வன்மை பெற்றிருக்கவுங் கூடும். ஆனால் பிரபஞ்சத்தின் இதிகாசத்தை ஆராய்ந்து பார்க்

*"Out, dunghill! darest thou brave a nobleman?"—Shakespeare.

குமிடத்து, பிராம்மணாதி நாலுவர்ணங்களும் இயற்கை நியமத்துக் கிணங்கி, ஒன்றன்பின் ஒன்றாக உலகத்தில் அதிகாரம் செலுத்திவருவதாகத் தெரியவரும். சீனர், சுமேரியர், பாபிலோனியர், எகிப்தியர், கல்தேயர், ஆரியர், இரானியர், யூதர், அரபியர் என்னும் இந்தச் சகல புராதன ஜாதியார்களுக்குள்ளும் சமாஜத்தை நடத்தும் சிரேஷ்ட அதிகாரமானது அவர்களது இதிகாசத்தின் பிரதம யுகத்தில் புரோகிதராகிய பிராமணரின் கையில் இருக்கிறது. இரண்டாவது யுகத்தில் அரசராகிய க்ஷத்திரியருக்கு, அந்த அதிகாரச் சிறப்பு ஏற்படுகிறது. இந்த ராஜ சக்தியானது சில தேசங்களில் ஏகாதிபத்தியம்பெற்ற ஒரே அரசனது நிரங்குசமான ஆளுகையாகவும், சில தேசங்களில் பொறுக்கியெடுத்த பிரபுக்கள் கூடிய சபையின் ஆளுகையாகவும் விளங்கும். வாணிகத் தொழிலால் தனிகரான வர்த்தக வகுப்பாராகிய வைசியரின் சமாஜத் தலைமை இங்கிலாந்து முதலிய ஆதுனிக பாச்சாத்ய ஜாதியாருக்குள்தான் * முதன் முதலாகக் காணப்படுகிறது.

முற்காலத்து துரோய, கார்த்தாக ராஜ்யங்களும், பிற்காலத்து வெனிஸ் முதலிய வர்த்தகப் பிராதானியமுள்ள சிற்றரசுகளும் அதிக மேன்மையை அடைந்தனவாயினும், அவைகளுக்குள் யதார்த்தமான வைசியசக்தியின் அப்யுதயம் சித்தித்ததாகச் சொல்வதற்கில்லை.

கருத்துடன் ஆராய்ந்து பார்த்தால், அப்பண்டை நாட்களிலே, ராஜ வம்சத்தின் சந்ததியார்களே சாமா

---

* ஆதுனிக பாச்சாத்ய ஜாதி = இக்காலத்து மேற்குச்சீமை ஜாதி.

ணிய ஜனங்களையும் தங்கள் சேவகர்களையும் கொண்டு வர்த்தகம் நடத்தி, வர்த்தக சம்பந்தமான சர்வாதிகாரத்தையும் தாங்களே கைக்கொண்டு அதிலிருந்து வரும் ஊதியத்தைத் தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டதாகத் தெரியவருகிறது. இந்தச் சிலரைத் தவிர்த்து, மற்றெவருக்கும் தேசபரிபாலனநீதி விவகாரங்களில் சம்பந்தப்படவாவது, தங்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவாவது அதிகாரம் ஏற்படவில்லை. எகிப்து போன்ற மிக்க புராதன தேசங்களிலே புரோகித சக்தியானது சொற்ப கால மட்டிலும் நிராடங்கமாய் அதிகாரம் செலுத்தி, அதன் பிறகு, ராஜ சக்தியின் வசப்பட்டு அதற்கு உபபலமாய் ஒழுகிவந்தது. சீன தேசத்தில் கன்புங்ஸூ என்னும் மேதாவியின் பிரதிபையால் ராஜ சக்தியானது கேந்த்ரீபூதமாகி * இருபத்தைந்து நூற்றாண்டுக் கதிகமாகப் புரோகித சக்தியைத் தனக்கு வசப்பட்டு நடக்குமாறு அடக்கி யாண்டுவந்தது. அன்றியும் சென்ற இரண்டு நூற்றாண்டு காலமாக, சர்வ சுதந்திரர்களாகிய திபெத் தேசத்து லாமாக்கள் † ராஜகுடும்பத்தின் ஆசாரிய புருஷர்களாயிருந்தும், சகலவிதங்களிலும் சீன சக்ரவர்த்தியின் ஆணைக் குட்பட்டுக் காலங் கழிக்க வேண்டியவர்களாய்விட்டனர்.

பாரதவர்ஷத்தில் ராஜ சக்தியானது இதர புராதன நாகரீக ஜாதியார்களுக்கு வெகுகாலம் பிற்பட்டு, புரோகித சக்தியை வென்று தன் நிரங்குசாதிகாரத்தை

---

* கேந்த்ரீபூதமாகி = கேந்திரித்து = கேந்திர மடைந்து = ஸர்வாதிகாரங்களையும் தன்னிடத்தே ஒரு மையப் படுத்தி.

† லாமா = திபெதிலுள்ள பௌத்த மடாதிபதி.

நாட்டியது ; ஆகையால், சீன, எகிப்திய, பாபிலோனியாதி ஸாம்ராஜ்யங்கள் நிலைத்த வெகு காலத்திற்குப் பிறகே பாரத ஸாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. ஒரு யூத ஜாதியாருக்குள் மாத்திரம் ராஜ சக்தியானது எவ்வளவு பாடுபட்டு முயன்றும், பௌரோகித்ய சக்தியின் மேல் தன் ஆதிபத்தியத்தை நிலை நிறுத்த முற்றிலும் திறனற்றதாய்விட்டது. யூதஜாதியில் வைசிய வகுப்பார்கூட ஒருபோதும் அந்த ஆதிபத்திய சக்தியை அடையவில்லை. அதற்கு மாறாக, சாமானிய ஜனங்கள் புரோகிதவர்க்கத்தின் கட்டினின்றும் தப்பித்துக் கொள்ள முயன்று, ஸ்வதேசத்துக்குள் உற்பத்தியான கிறிஸ்தவ முதலிய நவீன மத ஸ்தாபனங்களினால் நிகழ்ந்த கிளர்ச்சியினாலும், மகா பலம்பொருந்திய விதேசியரோம ராஜ்யத்தின் உபத்திரவத்தினாலும் நசுங்குண்டு, நைந்து போயினர்.

பிராசீன காலத்தில் எவ்வாறு பிராமண சக்தி எவ்வளவு காலம் போராடியும் கடைசியில் ராஜ சக்திக்கு உட்பட்டுப் போகவேண்டியதாயிற்றோ, அவ்வாறே இக்காலத்தில் நவமாய் உதித்த வைசிய சக்தியின் கடுந்தாக்குதலுக்கு ஆற்றாது எத்தனையோ அரச கிரீடங்கள் தரையில் சாய்ந்தன ; எத்தனையோ செங்கோல்கள் சின்னாபின்னமாயின. ஆனால் நாகரீகம் சிறந்து விளங்கும் சில தேசங்களில், மிதமான அதிகாரத்தை இன்னமும் செலுத்திக்கொண்டு ராஜ வைபவத்தையும் ஆடம்பரத்தையும் பிரகாசப்படுத்தும் சொற்ப சங்கியையான சிம்மாசனங்களெல்லாம், உப்பும் எண்ணெயும் சர்க்கரையும் சாராயமும் விற்று வியாபாரம் புரியும் வைசிய வர்க்

கத்தின் திரண்ட செல்வத்தினாலேயே நிலை நிறுத்தப் பெற்று, உள்ளபடியே ஆள்வோராகிய அந்த வைசியர் களின் பிரதாபத்துக்கும் பிரதிஷ்டைக்கும் சாதனமா யிருக்கும் பொருட்டே பார்வைக்குப் பகட்டாகவும் கம்பீரமாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன.

எதன் அதிகாரத்தினால் மின்சார சக்தியானது பூமியின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குக் கணப்பொழுதில் செய்திகளைக் கொண்டுபோகிறதோ, பர்வதம்போன்ற பேரலைகளால் கொந்தளிக்கும் மகா சமுத்திரம் எதன் ராஜமார்க்கமோ, எதன் கட்டளையி னால் பூமண்டலத்தின் ஒரு பாகத்திலிருந்து இன்னொரு பாகத்துக்குப் பண்டவகைகள் அவலீலையாகக் கொண்டு போகப் படுகின்றனவோ, எதன் ஆஞ்ஞைக்கு மகா சக்ரவர்த்திகள் கூட நடுங்குகிறார்களோ, எல்லாவற்றை யும் வென்றுவரும் அப்படிப்பட்ட வைசிய சக்தியின் வைபவரூபமான பேரலையின் வெண்ணுரைச் சிகரத்தில் மகா கம்பீரமாய் நிலைபெற்றிருக்கிறது இங்கிலாந்தின் மாட்சிமை தங்கிய சிங்காசனம்.

ஆகையால் பாரத தேசத்தின்மேல் பிரிட்டன்* கொண்ட வெற்றியானது, நமக்குப் பால்யத்தில் போதிக் கப்பட்டதுபோல் இயேசு கிறிஸ்துவின் மகிமையினா லாவது பைபிலின் பெருமையினாலாவது உண்டான வெற்றியுமன்று; மொகலாயரும் பட்டாணியரும் பாரத தேசத்தின்மேற் கொண்ட வெற்றியைப் போன்றது மன்று. ஆனால், இயேசுநாதர், பைபில், அற்புதமான

* இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கோத்லாந்து ஆகிய மூன்று ராஜ்ஜியங்களும் அடங்கிய தீவு.

அரண்மனைகள், பூமி அதிரும்படி நடந்துசெல்லும் சதுரங்க சேனையின் காலடியோசை, பேரிகை, எக்காளம் முதலிய போர்வாத்திய முழக்கம், இராஜ சிம்மாசனத்தின் திவ்ய தேஜோமயத் திகழ்ச்சி—இவையெல்லாவற்றுக்கும் பின்னால் எப்போதும் பிரத்தியக்ஷமாய் நிலைத்து விளங்குவது அந்த ஆங்கிலபூமி: தொழிற்சாலைகளின் புகைப் போக்கிகளையே போர்க் கொடியாகவும், வர்த்தகக் கப்பல்களையே சைனியமாகவும், உலகத்தின் வியாபார ஸ்தலங்களையே யுத்த பூமிகளாகவும், சுவர்ணாங்கியான சாக்ஷாத் ஸ்ரீ தேவியையே * சக்ரவர்த்தினியாகவும் கொண்டு பிரகாசிக்கும் அந்த அற்புதமான ஆங்கில தேசமே என்க. இக் காரணத்தினாலேயே இங்கிலாந்துக்குப் பாரததேசத்தில் உண்டான வெற்றியானது என்றுங் காணாத புதுமை யென்று நான் ஆரம்பத்தில் சொன்னது. இந்த நூதன மகா சக்தி விஜயத்தினால் பாரத தேசத்தில் என்ன நூதன சுழற்சி சம்பவிக்கப் போகிறதோ, அந்தச் சுழற்சியின் பயனாய் என்ன மாறுதல்கள் ஏற்படப் போகின்றனவோ, அவை பாரத தேசத்தின் சென்ற காலத்து இதிகாசத்தினின்றும் அனுமிக்கக் கூடியவைகளா யில்லை.

பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரெனும் நாலு வருணங்களும் முறையே பூமியை ஆளுகின்றன என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். இவற்றுள் ஒவ்வொரு ஜாதியும் அதிகாரம் செலுத்துங்காலத்

* விக்டோரியா மகாராணி; அவ்வம்மை ஜீவதசையிலிருக்கும்போது இந்த வியாஸம் வங்கமொழியில் முதலில் எழுதப்பட்டது.

தில், உலகத்துக்கு நன்மையான காரியங்கள் சிலவும், தீமையான காரியங்கள் சிலவும் நிகழ்கின்றன.

பௌரோகித்ய சக்திக்கு ஆதாரபீடமா யிருப்பது புத்திபலமே யன்றி ஸ்தூலமான புஜபல மன்று. ஆகையால் புரோகிதருக்குப் பிராதானியம் ஏற்படுவதோடு கூடவே புத்திப்பயிற்சியும் கல்வியாராய்ச்சியும் விருத்தியடைகின்றன. அதீந்திரியமான ஆத்யாத்மிக ஜகத்தின் செய்திகளை அறியவும், அதன் சகாயத்தைப் பெறவும் வேண்டும் என்னும் ஆவல் ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறது. அந்த ஜகத்தில் பிரவேசிப்பது சாதாரண ஜனங்களுக்குச் சாத்தியமில்லை. இந்திரியங்களை முற்றிலும் அடக்கவல்லவரும், சத்வகுணப் பிரதானமான சுபாவமுள்ளவருமாகிய சில மகாத்மாக்களே அபேத்யமாகிய ஜடவியூகத்துக்குட்* புகுந்து, அதீந்திரியமான தத்துவங்களைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்க வல்லவர். அவர்களே அவ் இராஜ்யத்தின் காரியாதிகளை அறிந்து, அதனின்றும் செய்திகளைக் கொண்டுவந்து பிறருக்கு வழிகாட்டிகளாயிருப்பவர்கள். இந்த மகானுபாவர்களே மானவ சமாஜத்தின் புரோகிதர்களும் பிரதமாசாரியர்களும் நாயகர்களும் பிரேரகர்களுமாய் இருப்பவர்கள்.

தேவர்களை அறிந்து தேவர்களுடன் பேசும் புரோகிதன் தேவ துல்யமாகப் † பூஜிக்கப்பெறுகிறான். உலக சிந்தைகளை ஒழித்துவிட்டபடியினால், அவன் இனி

---

* அபேத்யம்=பிளக்கமுடியாதது; ஜடவியூகம்=ஜடப் பொருட்கூட்டம்; வியூகம்=சேனை வகுப்பு.

† துல்யம்=சமம்.

வயிற்றுப் பிழைப்புக்காகச் சிறிதேனும் நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த உழைக்கவேண்டிய அவசிய மற்றவனாகிறான். சகல போகவஸ்துக்களிலும் அக்ர பாகம்* தேவர்களுக் குரியது; இந்த தேவர்களுக்குப் பூலோகத்தில் பிரதிநிதிகளாயுள்ளவர் பூதேவரென்னும் பிராமணர்களாம். இவர்கள் முகமாகவே தேவர்கள் தங்களுக்கு அர்ப்பிக்கப்படும் நைவேதயத்தைக் கிரகிக்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ சமாஜமானது புரோகிதனுக்கு ஏராளமான ஒழிவு நேரம் தருகிறபடியால், அவன் தியான சீலனாகவும் உத்தம தத்துவங்களை ஆராயக்கூடியவனாயும் இருக்கச் சாத்தியமாகிறது. ஆகவே புரோகிதர்கள் உன்னத நிலையில் இருக்கும் போது கல்வியும் அறிவும் அபிவிருத்தி யடையத் தொடங்குகின்றன. ஒரு பக்கம் அரசனாகிய பயங்கரமான சிங்கத்துக்கும், இன்னொரு பக்கம் பயத்தால் நடுங்கும் பிரஜைகளாகிய ஆட்டு மந்தைக்கும், நடுவில் புரோகிதன் நிற்கிறான். அந்தச் சிங்கத்தின் சர்வ சம்ஹாரப் பாய்ச்சலைப் புரோகிதன் கையிலுள்ள பிரம்ம தண்டம் அடக்கி நிறுத்துகிறது. தன ஜன மதோன் மத்தரான பூபாலரின் நிரங்குச அதிகாரத் தீயானது அதன் எதிர்ப் பட்ட சகலத்தையும் பஸ்மீகரிக்க வல்லதேயாயினும், தன ஜன சகாயமற்ற தரித்திரனும், தபோ பல மொன்றையே சகாயமாகக் கொண்டவனுமாகிய புரோகிதனது திருவாக்கு ஒன்றே அத் தீயை ஆற்றிவிடும். புரோகிதர் பிராதான்ய மடைந்த காலத்தில் நாகரிகத்தின் முதல் தோற்றமும், பசுத்தன்மையின்

* அக்ரபாகம்=முதற்பாகம்.

மேல் தெய்வத்தன்மையின் முதல் வெற்றியும், ஜடத்தின்மேல் சேதனத்தின் பிரதம விஜயமும், பிரகிருதிக்கு அடிமையான ஜடபிண்டமாகிய மானிட தேகத்துக்குள் மறைந்திருக்கும் தெய்வத்தன்மையின் பிரதம பிரகாசமும் புலப்படுகின்றன. புரோகிதனே ஜடத்தையும் சைதன்யத்தையும் முதலில் வேறுவேருய்க் கூறுபடுத்தினவன், இம்மையும் மறுமையும் ஒற்றுமைகொள்ள உதவி புரிந்தவன், தேவர்களுக்கும் மனிதருக்கு மிடையில் தூது செல்ல ஏற்பட்டவன், அரசரையும் பிரஜைகளையும் நடுவிலிருந்து ஒன்றுசேர்க்கும் பாலம் போன்றவன். சமஸ்த ஜகத்தின் யோகக்ஷேம வித்தானது அவனது தபோபலத்தினுலும் அவனது வித்யாநிஷ்டையினுலும், அவனது தியாக மந்திரத்தினுலும் வளர்ந்து, அவனது ஜீவரத்தத்தின் பிரவாகத்தினுலேயே தழைத்தோங்குகிறது. அக் காரணத்தினுலேயே சர்வ தேசங்களிலும் அவனுக்கே முதன்முதல் பூஜை செய்யப்படுகிறது; ஆகையினுலேயே அவனது ஸ்மரணங்கூட நமக்குப் பரிசுத்தமாயிருக்கிறது.

தோஷங்களும் இருக்கின்றன. ஜீவவளர்ச்சியுடன் கூடவே மாணத்தின் வித்தும் நடப்படுகிறது. இருளும் ஒளியும் எப்போதும் கலந்தே யிருக்கின்றன. தக்க காலத்தில் ஒழிக்காவிட்டால் ஜன சமாஜத்தை அழித்துவிடும்படியான பெருந் தோஷங்களும் உள. ஸ்தூலப் பொருள்களின் வாயிலாக வெளிப்படும் சக்தி எல்லோருக்கும் பிரத்யக்ஷமாய்ப் புலப்படுகிறது. அஸ்திர சஸ்திரங்களின் சேதபேதச்* செய்கைகளிலும், அக்

* சேதம்=வெட்டுதல்; பேதம்=பிளத்தல்.

கினி முதலியவற்றின் எரிக்கும் குணங்களிலும் வெளிப் படும் ஸ்தூலப் பிரகிருதியின் சக்திவிசேஷத்தை எல் லோருமே பார்க்கிறார்கள், அறிந்துகொள்ளுகிறார்கள். இவைகளைக்குறித்து எவர்களுக்கும் சந்தேகம் உண்டா கிறதில்லை; அவை நிச்சயமா என்பதைப்பற்றிக் கேள்வி பிறப்பதற்கும் இட மில்லை. ஆனால் அந்த சக்தியின் மூலாதாரமும் அதன் பிரவிருத்தியின் கேந்திரஸ்தான மும் முற்றிலும் மானஸிகமா யிருக்கு மிடத்தும், சில சப்த விசேஷங்களிலும், உச்சாரண விசேஷத்திலும், ஜப விசேஷத்திலும் அல்லது சிற்சில மானஸிக பிரயோக விசேஷத்திலுமே பலம் ஏற்படுகிறவிடத்தும், ஒளி யுடன் இருள் கலந்து நிற்கிறது; திடமான நம்பிக்கை அவ் விடத்தில் கடலலைபோல் பொங்கியும் தணிந்தும் அலைவது சகஜமாயிருக்கிறது. அங்கே பிரத்தியக்ஷ மாய்க் காணும் காட்சிகளிலும், அனுபவிக்கும் அனு பவங்களிலுங்கூடச் சிற்சில சமயங்களில் சந்தேகம் உண்டாகிறது. ரோகம், சோகம், பயம், கோபம், துவேஷம், பழிவாங்குதல் முதலிய மானுட துர்க்குணங் கள், இஷ்ட சித்தியின்பொருட்டு, பிரத்தியக்ஷமான புஜ பலத்தையும் மற்ற ஸ்தூல உபாயங்களையும் விட்டு விட்டு, அவைகளுக்குப் பதிலாக ஸ்தம்பனம், உச் சாடனம், வசீகரணம், மாரணம்* முதலிய மானஸிக

---

* ஸ்தம்பனம்=தேகத்தின் அங்கங்கள் தத்தம் தொழில் களைச் செய்யாமல் தடித்துப்போகும்படி செய்தல்; உச்சாட னம்=ஒருவனை வாழவொட்டாமல் நசிக்கச்செய்தல்; வசீகர ணம்=ஒருவனை வென்று தன் வயப் படுத்திக்கொள்ளுதல்; மாரணம்=கொல்லுதல்—இவை யெல்லாம் ஆபிசாரமந்திரப் பிரயோகத்தால் செய்யப்படுவனவாம்.

மான சூக்ஷ்ம உபாயங்களைக் கைக்கொள்ளும்போது, ஸ்தூல சூக்ஷ்மங்களுக்கு நடுவிலுள்ள, மூடுபனியடர்ந்தது போன்ற உருவெளித்தோற்றமான, பிரபஞ்சத்தில் பெரும்பாலும் சஞ்சரிக்கும் அப்படிப்பட்ட மனிதர்களின் மானஸிக ஆகாசத்தை நன்றாய் விளங்காத புகைத்தன்மையோடு கூடிய மேகபடலம் மூடிக்கொள்ளுகிறது. அவர்களுடைய மனோதிருஷ்டியில் நேர்வழி எப்போதும் தோற்றுகிறதில்லை. ஒருகால் தோற்றினும், அவர்களுடைய மனது அதை வக்கிர கதியாக விகாரப்படுத்திவிடுகிறது. இவற்றாலெல்லாம் கடைசியாக விளையும் பயன்—நேர்மையின்மை; குறுகலான, உதாரத்தன்மையற்ற, மனப்பான்மை. எல்லாவற்றினும் அதிக ஆபத்துக் கிடமானது என்னவெனில், பிறருடைய மேலான சிறப்பைக் கண்டு பொறாமையால் பகைமை பாராட்டும் குணமேயாம். எந்த சக்தியினால் தேவதைகளும் எனக்கு வசமாயிருக்கிறார்களோ, சரீரத்தையும் மனத்தையும் பற்றின வியாதிகளை வெல்லக்கூடிய திறன் எனக்கு எதனால் உண்டாயிருக்கிறதோ, பூத பிரேத பிசாசங்களும் எனக்கு எதனால் அடிமை பூண்டு ஊழியஞ் செய்கின்றனவோ, எந்த சக்தியை அடைவதற்காக நான் கடுந் தவம் செய்தேனோ, அப்படிப்பட்ட சக்தியை நான் பிறருக்கு ஏன் அளிக்கவேண்டும்? என்னுடைய செல்வத்தையும் பெயரையும் புகழையும் மற்றுமுள்ள சகல லௌகிக சுகபோகங்களையும் துறந்து பாடுபட்டுப் பெற்ற மகிமையை நான் பிறருக்கு ஏன் தரவேண்டும்?—என்று புரோகிதன் கேட்கிறான். மேலும் இந்த சக்தி முற்றிலும் மானஸிக

மானது. அதைப் பூரண ரகசியமாய் மறைத்து வைத்துக்கொள்ள எத்தனை உபாயங்களில்லை! இந்த சந்தர்ப்ப சக்கரத்தில் சிக்கிக்கொண்ட மானுட இயற்கையானது தவிர்க்கமுடியாதஎன்ன நிலைமையை அடையவேண்டியதாய்ச் சம்பவிக்குமோ, அந்த நிலைமையை அடைந்தே விடுகிறது. எப்போதும் தன்னை மறைத்து வைத்தலாகிய ஆத்துமகோபனத்துக்கு வழக்கப்பட்டு, அது அத்தியந்தமான சுயநலத் தன்மைக்கும் கபடத்தன்மைக்கும் ஆட்பட்டு, அவற்றால் அவசியம் விளையாநின்ற விஷமயமான பலன்களைத் தானே அனுபவிக்கவேண்டியதாய் விடுகிறது. காலக்கிரமத்தில் இந்த மறைத்து வைக்கும் விருப்பத்தின் பிரதிக்கிரியையும்* தன்மேலேயே வந்து விழுகின்றது. சரியான அப்பியாசமின்மையாலும் வினியோகமின்மையாலும் பிராயிகமாய்† சகலவித்தைகளும் சகலஞானமும் நாசமடையும். ஏதேனும் எஞ்சியிருந்தால், அது லோகாதீதமான தெய்விக மார்க்கமாய்ப் பெறப்பட்டதென்று கருதப்படுவதனால், சுதந்திரமாய்ச் சிந்தித்து நூதன விக்ஞானங்களில் விற்பத்தி யடையப் புதிய முயற்சி செய்யாமற் போயினும், பழையனவற்றில் எஞ்சி நிற்பதைப் பழுது பார்த்துப் பரிஷ்கரிக்க முயல்வதுகூட உபயோகமற்ற வீண் வேலை யென்று எண்ணப்படுகிறது. இவ்வாறு பூர்வ வித்தையையும் புருஷகாரத்தையும்‡ இழந்த புரோகிதன் தன் முன்னோர்களின் வெறும் பெயரை மாத்திரம்

* பிரதிக்கிரியை=எதிர்ச் செய்கை, எதிர்த் தாக்குதல்.

† பிராயிகமாய்=வெகுசாய்.

‡ புருஷகாரம்=தன்முயற்சி.

பிரதிஷ்டையாய்ச் சொல்லிக்கொண்டு, அவர்களுக்குரிய அதே மகிமையையும் அதிகாரத்தையும், அதே கௌரவத்தையும் ஆதிபத்தியத்தையும் சிறிதும் குறையாமல் தனக்குக் காப்பாற்றிவைத்துக் கொள்ளவேண்டுமென்று வீணே மன்றாடுகிறான். ஆகையினாலேயே இதர ஜாதிகளோடு அவனுக்கு விரோதம் உண்டாகிறது.

இயற்கை விதியின்படி, புதிதும் அதிக பலமுள்ளதுமான ஒரு சக்தி தோன்றுமிடத்திலெல்லாம், அது பழமையாயும் பழுதுற்றும் உள்ளதை வென்று அதன் இடத்தை ஆக்கிரமித்துக்கொள்ள முயல்கின்றது. தகுதியற்றவை அழிந்து தகுதியுற்றவை தங்கிநிற்றலுக்கு இயற்கை சகாயஞ் செய்கின்றது. புரோகித வர்க்கத்துக்கும் மற்ற வகுப்புகளுக்கும் உண்டான அவ்விதப் போராட்டத்தின் ஜயாபஜயங்களையும் பலாபலன்களையும் ஏற்கெனவே கூறியிருக்கிறோம்.

புரோகிதன் உன்னத நிலையில் இருந்த காலத்தில் தத்வானுசந்தானத்தின் பொருட்டுப் பிரயோகிக்கப்பட்ட தவம், இந்திரிய நிக்கிரகம், வைராக்கியம் முதலிய உத்தம சீலங்களெல்லாம், அவன் தாழ்ந்த நிலைக்கு வருவதற்கு அடுத்து முந்திய காலத்தில் கேவலம் போக போக்கியங்களைச் சேகரிப்பதற்கும், அதிகாரத்துடன் கூடிய உயர்வைப் பெருக்கிக் கொள்வதற்கும் முற்றிலும் செலவிடப்பட்டுக் கழிந்தன. எந்த சக்தி தன்னிடம் திரண்டிருத்தலினால், புரோகிதன் சகலவிதமான கௌரவத்துக்கும் பூஜ்யதைக்கும் உரியவனானானோ, அந்த சக்தியே இப்போது அந்த உன்னதமான சுவர்க்க

பதவியிலிருந்து தாழ்ந்த நரகக் குழியில் தள்ளுண்டு போய்விட்டது. உத்தேசத்தை மறந்து, திசை தப்பித் தவிக்கும் புரோகித சக்தியானது சிலந்திப் பூச்சியைப்போல் தான் பின்னிய கூட்டில் தானே சிக்குண்டு போயிற்று. பிறர் காலில் பூட்டுவதற்காகத் தலைமுறை தலைமுறையாய் அதிக ஜாக்கிரதையோடு அமைக்கப் பட்ட சங்கிலியானது இப்போது அதன் காலையே ஆயிரம் சுற்றாய்க் கெட்டியாகச் சுற்றிக்கொண்டு அதன் சலன சுதந்திரத்தைப் பல வழிகளில் தடுப்பதா யிருக்கிறது. சமாஜத்தைப் பல விதங்களிலும் வஜ்ஜிரக் கட்டாய்க் கட்டி வைக்கும்பொருட்டு சரீர சுத்திக் கென்றும் சித்த சுத்திக் கென்றும் பாகிய* சாதனங்களாக ஏற்படுத்தப்பட்ட புங்கானு புங்கமான யக்ஞ யாக விரதா சாராதி கர்மரூபமாகிய எந்த வலையானது நாலா பக்கத்திலும் விரிக்கப்பட்டதோ, அந்த வலையின் அனந்தமான நூற்பின்னலில் புரோகித சக்தி இப்பொழுது ஆபாத மஸ்தகம் சிக்குண்டு ஆசை யழிந்து உறங்கிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் வழியில்லை. இந்த வலையை அறுத்து விட்டாலோ, புரோகிதனது பௌரோகித்யம் போய்விடும்! உன்னதியடையவேண்டுமென்னும் பலமான எண்ணம் பிரதி மனிதனுடைய உள்ளத்திலும் இயற்கையாய்க் குடிகொண்டிருக்கிறது. ஆனால், புரோகிதர்களின் வலையில் அகப்பட்டிருக்கிறவரையில் இவ் எண்ணம் நிறைவேறுவது அசாத்யம் என்று அறிந்து, யாரேனும் அந்த வலையை அறுத்தெறிந்து இதர வருணங்களின் தொழில்

* பாகிய சாதனம் = புறச் சாதனம்.

களைச் செய்து திரவியம் சம்பாதிக்குமிடத்து, அப்படிப்பட்டவர்களின் பௌரோகித்யாதிகாரத்தைச் சமாஜம் உடனே நிராகரித்துவிடுகிறது. சிகையை எடுத்துவிட்டு, மயிரைக் கத்தரித்து வாரிவிட்டுக்கொண்டு, பூர்வ சம்பிரதாயங்களையும் சிஷ்டாசாரங்களையும் ஒழித்து, அரை ஐரோப்பிய உடை தரித்தும், மேற்குப் பக்கத்திலிருந்து புதிதாய்ப் புகுந்த 'மோஸ்தர்'களை அரைகுறையாய் அவலம்பித்துமுள்ள பார்ப்பாரின் பிராமணத்துவத்தில் சமாஜத்துக்கு நம்பிக்கை இல்லை. அன்றியும், பாரததேசத்தில் எவ் எவ் இடங்களில், புதிதாய் வந்த இந்த பிரிட்டிஷ் துரைத்தனத்தார் நூதன கல்விப் பயிற்சி முறைகளையும் பொருள் சம்பாதிப்பதற் கேற்ற புதிய மார்க்கங்களையும் ஸ்தாபித்து வருகிறார்களோ, அவ்விடங்களி லெல்லாம் அந்தணச் சிறுவர்கள் கூட்டங் கூட்டமாய்க் குவிந்து, தங்கள் வம்சானுக்கிரமமான வைதிகத் தொழிலைக் கைவிட்டு, இதர ஜாதித் தொழில்களிற் பிரவேசித்துப் பொருளீட்டத் தலைப்பட்டுவிடவே, பிராசீன கால முதல் தாரதரமாய் அநுஷ்டிக்கப்பட்டு வந்த ஆன்றோர்களின் ஆசார விவகாரங்களெல்லாம் பாதாளத்திற் போய்ப் பதுங்கின.

கூர்ஜர (குஜராத்) தேசத்தில் பிராமண ஜாதியின் ஒவ்வொரு சாகையிலும் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் வைதிகத் தொழிலையும், மற்றப் பிரிவைச்சேர்ந்தவர்கள் இதர தொழில்களையும் செய்து ஜீவனம் செய்கிறார்கள். இந்த வைதிகத் தொழில் செய்கிறவர்களுக்குத்தான் அங்கே பிராமணர்களென்று பெயர். மற்றொரு பிரிவைச் சேர்ந்தவர்களும் பிராமண

வம்சத்திற் பிறந்தவர்களா யிருந்தும், அவர்களுடன் புரோகித பிராமணர்கள் விவாக சம்பந்தம் செய்து கொள்வதில்லை. இதற்குத் திருஷ்டாந்தமாக, மேற் கூறிய பிராமண ஜாதியில், புரோகிதத் தொழில் செய்து தக்ஷிணை வாங்கிப் பிழைக்கும் பிராமணர்களுக்கு மாத் திரம் 'நாகர பிராமணர்' என்றும், மற்றுச் சர்க்கார் உத்தியோகம் செய்தும் வர்த்தக முதலிய வைசியத் தொழில்களிற் பிரவேசித்தும் ஜீவிக்கிறவர்களுக்குக் கேவலம் 'நாகரர்' என்றும் பெயர்கள் வழங்கிவருகின் றன. ஆனால் இந்தப் பேதமானது இனி வெகு நாளைக்கு இராது என்று தோற்றுகிறது. ஏனெனில், இக் காலத்தில் நாகர பிராமணர்களின் பிள்ளைகளும் இங் கிலீஷ் படித்துச் சர்க்கார் உத்தியோகங்களில் அமர்ந் தும், மற்றும் வர்த்தக வியாபாரங்கள் செய்தும், வருகி றார்கள். பூர்வாசார பராயணர்களான பண்டிதர்கள்கூட எவ்வளவோ கஷ்டப்பட்டுக்கொண்டு தங்கள் பிள்ளைகளை இங்கிலீஷ் கலாசாலைக்கு அனுப்பியோ, அல்லது வைத் தியர், காயஸ்தர் முதலிய பிராமணரல்லாத ஜாதியார் களின் தொழில்களிற் புகுத்தியோ, வருவது இப்போது சகஜமாய்ப் போய்விட்டது. இவ் விதம் விவகாரங்கள் நடைபெற்றுவந்தால், இனி எவ்வளவு காலம் புரோகித வர்க்கம் இத் தேசத்தில் நிலைத்திருக்க முடியும் என்பது கருத்துடன் விசாரிக்கத் தக்க விஷய மென்பதற் கைய மில்லை. பிராமண ஜாதியின் அதிகார ஆதிக்கத்தைச் சிதைக்கும் முயற்சி என்னும் தோஷத்தைத் தம்மிடத் தல்லாமல் இதர வியக்திகளின்* மீதாகிலும் வியக்திகள்

* வியக்தி = ஆள்.

சேர்ந்த சமூகத்தின் மீதாகிலும் ஆரோபிக்கிறவர்கள், பிராமண ஜாதியானது தவிர்க்கமுடியாத இயற்கை நியமத்திற் குட்பட்டுத் தன்னை அடக்கம் செய்யும் பொருட்டுத் தானே குழிவெட்டிக் கொள்ளுகிற தென்பதை அறியவேண்டும். அஃது அவ்வாறு செய்வதே க்ஷேமகரம். உயர் பிறப்பு என்றும் அதிகார கௌரவமுள்ள வம்சம் என்றும் இறுமாப்புக் கொள்ளும் ஒவ்வொரு ஜாதியும் தன் கையாலேயே தன் தகனக்கிரியையைச் செய்து கொள்வது உத்தமும் உசிதமுமான கார்ரிய மாகும்.

சக்தியைச் சம்பாதிப்பது எப்படி ஆவசியகமோ அப்படியே, அல்லது இன்னும் அதிகமாகவே, அதை வினியோகிப்பதும் அவசிய மாம். இருதயத்தில் இரத்தம் திரண்டிருப்பது உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது; அது சரீரமுழுவதும் பரவாவிடில், மரணம் சம்பவிப்பது திண்ணம். சமாஜ க்ஷேமத்தின் பொருட்டு ஓர் காலத்தில் எல்லாக் கல்வியும் சக்தியும் சிறப்பாகச் சில குடும்பங்களிலாவது சில ஜாதிகளிலாவது திரண்டிருப்பது அத்தியாவசியமே யாம்; ஆனால் அவ்வாறு திரண்டுள்ள சக்தியானது பிறகு சமாஜ முழுவதிலும் விரிந்து பரவுவதற்காகவே அங்கு சேமிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பரவவொட்டாமல் தடுத்தால், அந்த சமாஜத்துக்கு விநாச காலம் கிட்டிவிட்ட தென்பதற்கு எள்ளளவும் சந்தேக மில்லை.

இது நிற்க, இன்னொரு பக்கத்தில் அரசன் சிங்கத்தைப்போல் ஹுங்காரம் செய்து கொண்டு நிற்கிறான்; மிருகேந்திரனுடைய குணதோஷங்க ளனைத்தும் அவ

னிடத்தில் அமைந்திருக்கின்றன. சமயம் வாய்க்கும் போது இரத்தத்தைப் பருகித் தாகம் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுச் சிங்கமானது, புல் பூண்டுகளைத் தின்று ஜீவிக்கும் சாந்த குண முள்ள ஜந்துக்களின் குடலைப் பீறிக் கண்ட துண்டம் செய்யாமல் ஒரு கணமேனும் தன் கோரமான நகங்களை உள்ளுக் கிழுத்துக் கொள்ளாது: ஆயினும், சிங்கம் மூப்பினால் அங்கந் தளர்ந்து பசியினால் பிராணனை விடும் தருணத்தி லிருந்தாலும், தன்னைச் சரணமடைந்த நரியைக் கொல்லாதென்று ஒரு கவி கூறுகிறார். பிரஜைகள் இராஜ சிங்கத்தின் போக விருப்பத்துக்கு இடையூறாய் நிற்கும் பக்ஷத்தில், அவர்கள் சர்வநாச மடைவது திண்ணம். விநயத்துடன் அவனது ஆணையைச் சிரமேற் கொண்டு ஒழுகினால் தான் அவர்களுக்கு க்ஷேமம். அதுமாத்திர மன்று; பொது நலப் பிரியமும், பொது ஜன சேவையும், ஜன சாமானியத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டுத் தனி மனிதர்கள் தன்னயம் பாராட்டா துழைத்தலுமாகிய இவற்றின் தாற்பரியத்தை, பூர்வ காலம் வரையிற் போவானேன், இக் காலத்திற்கூட, எந்தத் தேசத்தாரும் சரியாய்க் கிரகிக்கவில்லை. ஆகையால்தான், ராஜரூபமாகிய சக்தி கேந்திரம் சமாஜத்திலிருந்தே சிருஷ்டியாயிருக்கிறது. ஒன்றுக்கு ஒன்று சம்பந்த மில்லாமல் சிதறிக் கிடக்கும் சமாஜ சக்திகளனைத்தும் அந்தக் கேந்திர ஸ்தானத்தில் சமஷ்டியாய்த் திரண்டு அதிலிருந்து தொடங்கி சமாஜசரீர முழுவதிலும் பரவுகின்றது. பிராமணாதிகார காலத்துப் பிரதம தசையில் எப்படி ஞான விசார உணர்ச்சி உதயமாகிப் பிறகு பாலியதசையில்

பிரயத்தன பூர்வமாய் வளர்க்கப்பட்டு விருத்தி யடைந்ததோ, அப்படியே க்ஷத்திரியாதிகார சமயத்திலும் பிரதம தசையில் சுகபோக விருப்பம் பலமாய்த் தோன்ற, அதை நிறைவேற்றுவதற்குச் சாதனமாகப் பல வகை நூதன கற்பிதங்களும், கலைகளும், விஞ்ஞானங்களும் சிருஷ்டியாகிப் புஷ்டியடைந்தன. மகோன்னத நிலையிலுள்ள மன்னுயிர்க் காவலன் ஏழைகளின் இழிந்த குடிசைகளில் தன் மகத்துவங்கொண்ட தலையை மறைத்துக்கொண்டிருக்க விரும்புவனோ? அல்லது அவனது பிரஜைகள் புசிக்கும் சாமானிய பதார்த்தங்களால் அவனுடைய ராஜபசியைத் தணிக்க இயலுமா?

நரலோகத்தில் எவனுடைய மகிமைக்கு நிகர் இல்லையோ, எவன் நரதேகமாகிய ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் தெய்வமோ, அப்படிப்பட்ட அரசனுடைய போக்கிய வஸ்துக்களைச் சாமானிய ஜனங்கள் கண் எடுத்துப் பார்ப்பதுகூடப் பெருங் குற்றமாம்; அவற்றைப் பெற விரும்புவதைப்பற்றிக் கேட்கவேண்டியதேயில்லை. அரசனது திருமேனி இதர ஜனங்களின் தேகங்களைப் போன்றதன்று; எவ்வித மலினத்தினாலும் அபரிசுத்தமாக்கக் கூடாத பரமபாவனத்தன்மை பொருந்தியது அது. சில தேசங்களில் யமனுடைய அதிகாரம் கூட அந்தத் திருமேனியை அணுகாதென்று நம்புகிறார்கள். அதற்குச் சமான பரிசுத்தமான பிரபை ராஜமகிஷியையுஞ் சூழ்ந்து ஒளிசெய்வதனால், அவளுக்கு 'அஸூர்யம்பச்யா' என்று பெயருண்டாயிருக்கிறது; அதாவது அவளுடைய வடிவழகின்மேல் சூரியரசிமிகூட விழக்கூடாதாம்; ஆகவே அவளைச் சாமானிய ஜனங்கள்

பார்க்க வொண்ணாதபடி ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வருகிறார்கள். அதனாலேயே கூரைக் குடிசைகளுக்குப் பதிலாக உன்னதமான ஆரமனைகள் ஏற்பட்டன; தேவ லோகத்திலிருந்து வந்ததோ என்று ஐயுறும்படியான ஸ்வர சம்யோகத்துடன் கூடிய மதுரமான கான ரச வெள்ளம் மண்ணுலகத்திற் பிரவகித்து, நாகரிகமற்ற பட்டிக்காட்டு ஜனங்களின் சந்தை யிரைச்சலை அடக்கி யது. இயற்கை வனப்பு வாய்ந்த மேடுபள்ளமான காடு கள் இருந்த இடத்தில் அழகிய தோட்டங்களும், ரம்மிய மான உபவனங்களும், சுந்தரமான சித்திரசாலைகளும், கண்ணைப் பறிக்கும் வர்ணபடங்களும், அற்புதமான சிற்ப வேலைகளும், நாகரிகமற்ற கிராமவாசிகளின் அலங்கோலமான உடைகளுக்கு மாறாக மெல்லிய பட்டாடைகளும் படிப்படியாய் வழங்கலாயின. லக்ஷோப லக்ஷமான விவேகிகள் கஷ்டமான கிருஷித்தொழிலை விட்டு, சொற்ப சிரம முள்ளதும் சுலபமான வழிகளில் தங்கள் சூக்ஷ்மபுத்தியைப் பிரயோகிப்பதற் கேற்றது மான நூதன துறையாகிய சித்திர கலைகளில் மனதைச் செலுத்தினார்கள். கிராம கௌரவம் குலைந்தது,— நகர நிர்மாணம் திகழ்ந்தது.

மேலும் பாரதவர்ஷத்தில்தான் அரசர்கள் சில காலம் விஷயபோகங்களை ஆசை தீர அனுபவித்து, அத் தகைய அமிதமான போகானுபவத்தினால் உலக சுகங்களில் விரக்தி யடைந்து, அபர வயதில் ஆரணியம் சென்று, ஆத்மவித்தையின் ஆழ்ந்த ரகசியங்களை ஆராயத் தொடங்கினர். அவ் விதமான வைராக்கியத்தி லிருந்தும் ஆழ்ந்த ஆராய்ச்சியிலிருந்தும் விளைந்த

முடிபுகளை உபநிஷத்துக்களிலும் கீதையிலும் ஜைன, பௌத்த நூல்களிலும் விரிவாய்க் காணலாம். அத்யாத்ம தத்துவங்களில் ஏகாந்தமான அனுராகமும்,* மந்திர தந்திரங்கள் அனந்தமாய்ப் பெரும்பாரமாய்விட்ட கர்மகாண்டத்தில் அத்யந்தமான அருவருப்புமே அவற்றின் பிரதான லக்ஷணங்கள். இங்கும் பௌரோகித்ய ராஜன்ய சக்திகளுக்குள் கடும் போராட்டமே. கர்மகாண்டம் தொலைந்தால் புரோகிதனது பிழைப்பு திண்டாட்டமாய்விடும். ஆகவே சாதாரணமாய்ச் சகல தேசங்களிலும் எப்போதும் புரோகிதர்கள் பழைய வழக்கங்களையும் ஆசாரங்களையும் எப்பாடாவது பட்டுக் காப்பாற்றக் கங்கணம் கட்டி நிற்கிறார்கள்; இவர்களை எதிர்த்து, பிரம்ம சக்தியைக் காட்டும் சாபத்தை ஒரு கையிலும், க்ஷாத்திர சக்தியைக் காட்டும் சாபமென்னும் வில்லை ஒரு கையிலும் கொண்டு ஜனகாதி ராஜரிஷிகள் விளங்குகின்றனர். இன்னொரு பக்கத்தில் இவ் உபய கக்ஷிகளின் தீர்க்க விரோதத்தைப்பற்றி ஏற்கெனவே விரிவாய்ச் சொல்லி யிருக்கிறோம்.

புரோகிதன் சகல வித்தைகளுக்கும் தானே கேந்திரஸ்தானமா யிருக்கவேண்டிக் கண்ணும் கருத்துமாய்ப் பாடுபட்டு வந்ததைப் போலவே, அரசனும் பார்த்திவ சக்திகளை யெல்லாம் ஒன்றாய்த் திரட்டித் தன்னிடத்தில் நிலைப்பிக்க இடைவிடாமல் ஊக்கமா யிருந்தான். இவ் இரண்டினாலும் நன்மை உண்டு என்பதில்

---

*ஏகாந்தமான அனுராகம் = ஒருதலையான பற்று.

ஐய மில்லை. இவ் உபய வஸ்துக்களும் ஒவ்வொரு காலத்தில் சமாஜ க்ஷேமத்துக்கு அவசியமானவையே. ஆனால் அப்படி யிருப்பது சமாஜத்தின் சிசுப் பிராயத்தில்தான் பிரயோஜன முடைத்து. சமாஜம் குழந்தைப் பருவம் கடந்து பூர்ண யௌவன தசை யடைந்த பிறகும் பாலியோசிதமான வஸ்திரங்களை அதற்குப் பலாத்காரமாய் உடுத்தி நிர்ப்பந்தப்படுத்த முயன்றால், ஒன்று, சமாஜம் அந்தக் கட்டுகளைத் தன் சுய பலத்தினால் அறுத்துத் தள்ளி முன்னேற வாவது பார்க்கும், பின்னோக்கிச் சென்று மெல்ல மெல்ல முன்னைய அநாகரிக நிலையை யாவது மீண்டும் அடைந்துவிடும்.

அரசர் பிரஜைகளுக்குத் தாய்தந்தையரைப் போன்றவர்; அவர்களுக்குப் பிரஜைகளே குழந்தை குட்டிகள். பிரஜைகள் சர்வ விஷயங்களிலும் அரசனையே பின்பற்றி அவனுக்கு முற்றிலும் அமைந்து நடக்கவேண்டும். அரசனும் அவர்களைப் பாரபக்ஷமின்றிப் பரிபாலித்து, அவர்களது யோகக்ஷேமங்களைப் பேணி, தன் ஔரஸ சந்தானங்களைப் போல்* அவர்களை அன்புடன் நடத்தவேண்டும். ஆனால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் பொருந்தும் நீதியே தேசத்திலுள்ள சமாஜ முழுவதற்கும் அமையும்; ஏனெனில் சமாஜமென்பது பல குடும்பங்களின் சமஷ்டியே யன்றி வேறன்று. இனி, ப்ராப்தே து ஷோடசே வர்ஷே புத்ரம் மித்ரவத் ஆசரேத்—பதினாறுண்டு பிராயம் எய்துங்கால் மகன்

---

* ஔரஸ=தனக்குத் தர்மபத்தினியிடம் பிறந்த.

றனை மித்திரனெனவே நடத்துக,* என்பது நியாய மானால், அந்தப் பதினாறுண்டு பிராயத்தைச் சமாஜ சிசு ஒருபோதும் அடையாதா? ஏதோ ஒரு காலத்தில் ஒவ்வொரு சமாஜமும் மேற்கூறிய யௌவன தசையை அடைகிற தென்றும், அப்பொழுது ராஜ சக்திக்கும் பிரஜா சக்திக்கும் பெரிய போராட்டம் விளைகிறதென் றும் இதிகாசம் சான்று கூறுகிறது. இந்தப் போராட் டத்தில் உண்டாகும் வெற்றிதோல்விகளை அனு சரித்தே சமாஜத்தின் பிராண சக்தியும், அதன் விகாச மும், நாகரிகமும் அமையும்.

சமாஜத்தில் விப்லவத்தை† உண்டாக்கக்கூடிய அப் படிப்பட்ட மாறுதல்கள் பாரத தேசத்தில் அடிக்கடி நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் தர்மமே‡ பாரத தேசத் தின் பிராணனும், தர்மமே அதன் பாஷையும், தர் மமே அதன் சகல முயற்சிகளுக்கும் பிரதான சின் னமுமா யிருப்பதனால், இந்தத் தேசத்தில் அந்த மாறு தல்களெல்லாம் தர்மத்தை முன்னிட்டே உண்டாயிருக்

* இது சாணக்கிய நீதியிலிருந் தெடுத்தது. முழு சுலோகம் வருமாறு: "லாலயேத் பஞ்ச வர்ஷாணி, தச வ்ர்ஷாணி தாட யேத்; ப்ராப்தே து ஷோடசே வர்ஷே புத்ரம் மித்ரவத் ஆச ரேத்." இதன் பொருள்: ஐந்தாண்டு வரையில் அருமையாய் வளர்க்க; இளமையில் ஐந்தாண்டுகள் புடைக்க; பதினா றுண்டு பிராயமெய்துங்கால், மகன்றனை மித்திரனெனவே நடத்துக.

† விப்லவம் = சுழற்சி, புரட்சி.

‡ தர்மம் என்னும் சொல் ஈண்டு சமயம், சமயாசாரம் முத லிய பொருள்களை உணர்த்தும்; சிவ தர்மம், விஷ்ணு தர்மம், பௌத்த தர்மம் முதலிய பிரயோகங்களில் வருவதுபோல்.

கின்றன. சார்வாகம், ஜைனம், பௌத்தம், சாங்கரம், ராமானுஜம், கபீர் மதம், நானக் மதம், சைதன்னிய மதம், பிராம்ம சமாஜம், ஆர்ய சமாஜம் இத்தியாதி சகல சம்பிரதாயங்களுக்கும் முன்னணியத்தில் அல்லோல கல்லோலமாய் நுரை தள்ளி ஆரவாரித்தெழுவது தர்ம மென்னும் பேரலை; பின்னணியத்தில் உண்டாவது சமாஜத் தேவைகளின் பரிகாரம். அர்த்தமற்ற சில அக்ஷ ரங்களை மிணுமிணுப்பதனாலேயே சகல அபீஷ்டங் களும் சித்தியடையு மானால், இனி எவன் தன் விருப் பங்களை நிறைவேற்றிக்கொள்ள கஷ்ட சாத்தியமான புருஷகாரத்தைப் பின் பற்றுவான்? சமாஜ சரீர முழுவ தும் இந்த வியாதி வியாபிக்குமானால், அந்த சமாஜம் முழுவதும் ஊக்கங் குன்றி உற்சாக மழிந்து சீக்கிரத் தில் நாசமடையும். ஆகையினாலேயே பிரத்தியக்ஷப் பிரமாணத்தை யன்றி வேறொன்றையும் ஒப்புக்கொள் ளாத சார்வாகர் நெஞ்சைப் பிளக்கும்படியான நிந்தை மொழிகளைப் பிரயோகித்தனர். பசுமேதம், நரமேதம், அசுவமேதம் இத்தியாதி பிராணிவதை நிறைந்த பிரம்மாண்டமான கர்மகாண்டத்தின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் உயிர் தத்தளிக்கும் சமயத்தில், சீலத் தையும் ஞானத்தையும் பிரதானமாகக் கொண்ட ஜைன மதத்தை யன்றி வேறெது சமாஜத்தை உத்தரித் திருக்க முடியும்? அல்லது பௌத்த மதம் தோன்றி யிராவிட்டால், அதிகாரச் செருக்குற்ற உயர்ந்த ஜாதி யாரின் கொடுமைகளிலிருந்து லக்ஷோபலக்ஷம் கீழ் ஜாதி யார்களை வேறெது விடுதலை செய்திருக்க முடியும்? காலக் கிரமத்தில் பௌத்த தர்மமும் க்ஷீணிக்க, அதன்

சிறந்த சதாசாரங்களெல்லாம் மகா துராசாரமாக மாறி, சார்வஜனிக சகலகாருணிக சமத்வ தத்துவத்தை முன்னிட்டு பௌத்த சங்கத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்ட அநாகரிகரான பலவகைப் பர்ப்பர ஜாதியாரின் பேய்க் கூத்தினுல் பாரத சமாஜம் நடுநடுங்கித் தத்தளித்துக் கொண்டிருந்த காலத்தில், முதலில் சங்கரரும், பிறகு ராமாநுஜரும் பூதலத்தில் அவதரித்து, இத் தேசத்தைப் பூர்வ கால வைபவத்துக்கு உயர்த்தவும், இழந்து போன பூர்வ பிரதாபத்தையும் மகிமையையும் மீண்டும் ஸ்தாபிக்கவும் தம்மா லான பாடு பட்டார்கள். அன்றியும் முகம்மதியர் காலத்தில் கபீர், நானக், சைதன்யர் இவர்களுடைய சம்பிரதாயங்களும், இக் காலத்தில் பிராம்ம சமாஜ, ஆர்ய சமாஜ ஸ்தாபனங்களும் உண்டாயிராவிட்டால், பாரதவருஷத்தில் இந்துக்களைவிட முசல்மான்களும் கிறிஸ்தவர்களும் ஜனத்தொகையில் எவ்வளவோ அதிகமாய் மிஞ்சியிருப்பார்களென்பதில் சந்தேகமே யில்லை.

பாஞ்சபௌதிகமான சரீரத்தையும் அலையலையாயெழும் அனந்த சிந்தைகளோடுகூடிய சித்தத்தையும் போஷிப்பதற்குப் போஜன திரவியத்தைவிடச் சிறந்த பதார்த்தம் யாதிருக்கிறது? ஆனுல் தேக ரக்ஷணத்துக்கும் மனத்தைத் திட்படுத்துவதற்கும் இன்றியமையாத ஆகாரம் சரியாய் ஜீரண மாகாமல், தேகத்தின் சுபாவ பிரவிருத்திகள் ஒழுங்காய் நடவாவிட்டால், அதுவே சகல அனர்த்தங்களுக்கும் மூலமாகும்.

சமஷ்டியானது பிராணனேடிருந்தால்தான் வியஷ்டியும் பிராணனேடிருக்கும்; சமஷ்டி சுகமாயிருந்தால்

தான் வியஷ்டிக்கும் சுகமுண்டாகும். இது நிலைபான உண்மை. இந்த உண்மை யென்னும் ஸ்திரமான அஸ்திவாரத்தின்மேலேயே நிலைத்திருக்கிறது இந்தப் பிரபஞ்சம். அனந்த ஸமஷ்டியினிடத்துச் சம்மேளனம் மேலிட்டு, அது சுகிக்கையில் தான் சுகித்து, அது துக்கிக்கையில் தான் துக்கித்து, மெல்ல மெல்ல மேல் நோக்கிச் செல்வதே வியஷ்டியின் ஒரு தனிக் கடமையாம். கேவலம் கடமைமாத்திர மன்று; அதை மீறி நடந்தால் மரணம் திண்ணம்: அதற் கிணங்கி யொழுகினால், அமரத்துவம் சித்தியாம். இது இயற்கை நியமம். இமைகொட்டாமல் விழித்திருக்கும் இயற்கையின் கண்ணில் மண்ணைத் தூவ யாரா லாகும்? சமாஜத்தின் கண்ணைக் கட்டி அதை வெகு காலம் ஏய்த்துக்கொண்டிருக்க யாராலும் ஆகாது. சமாஜத்தின் மேற்புறத்தில் குப்பையும் கூளமும் குவியல் குவியலாய் எவ்வளவு திரண்டிருந்தாலும், அந்தக் குவியல்களின் அடியில் எங்கும் பரவிய அன்புடனும் எவ்வுயிரிடத்தும் சுயநலமற்ற கருணையோடும் கூடி சமாஜத்தின் பிராணதாது எப்போதும் துடித்துக்கொண்டே யிருக்கிறது. சகலத்தையும் பொறுத்தருளும் பூமிதேவியைப்போல் சமாஜமும் எத்தனையோ கொடுமைகளைப் பேசாமல் பொறுத்துக் கொண்டிருக்கிறது; ஆனால் எவ்வளவு காலம் கழித்தாயினும் அது என்றைக்கோ ஒரு நாள் விழித்துக்கொள்ளப் போகிறது. அந்த விழிப்பினால் சோம்பல் முறித்துக் கைகால்களை உதறும் விசையானது, யுக யுகாந்தரமாக மௌனமாய்ப் பொறுத்து வந்ததனால் குவிந்து போயிருக்கும் குற்சிதத் தன்மயக் குப்பைக் குவியல்

களை யெல்லாம் தூரத்தில் வீசி யெறிந்துவிடும். இந்த மகத்தான உண்மையை நாம் மறந்துவிடுகிறோம். நமது மௌடிகத்துக்காக நாம் ஆயிரந் தடவை துன்பப்பட்ட போதிலும், தமோகுணமயமான பசுபிரகிருதிமேலிட்ட மானுடராகிய நமக்கு அதில் நம்பிக்கை உண்டாகிற தில்லை. நாம் ஏமாற்றப் பார்க்கிறோம்; ஆயிரந் தடவை நாமே ஏமாந்து போவதாக நமக்குத் தெரிந்தும் நமது குரங்குப் பிடியை மாத்திரம் நாம் விடுவதில்லை. பிரகிருதியை வஞ்சித்துவிடலா மென்னும் பைத்தியக்கார எண்ணம் நம் மனதில் குடிகொண்டிருக்கிறது. எவ்விதத் தினாலாவது சுயகாரிய சாதனமே ஜன்ம மெடுத்ததற்குச் சிறந்த பிரயோஜனமும் பரம புருஷார்த்தமு மென்று நாம் கண்மூடித்தனமாய்க் கருதுகின்றோம்.

கல்வி, அறிவு, செல்வம், சுற்றம், வன்மை, வீரம் இன்னோரன்ன எவ் எப் பேறுகளை இயற்கையானது நம்மிடத்தில் திரட்டிச் சேர்த்துவைத்திருக்கிறதோ, அவை யெல்லாம் சமயம் வாய்ந்துழிப் பிறருக்குதவும் பொருட்டே யாகும். இந்தச் செய்தியை நாம் மறந்து, நம்மிடத்தில் நம்பிக்கையாய்ச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பொருள்களின்மேல் 'எம்முடையது' என்றோர் முத்திரையைப் போட்டுக்கொள்ளுகிறோம்; அதோடு நம்முடைய அழிவின் விதையையும் விதைத்தவர்க ளாகிறோம்.

பிரஜா சமஷ்டியின் சக்திகளுக்குக் கேந்திர சொரூபமான அரசன் அந்தச் சக்திகளை 'ஸஹஸ்ரகுண முத்ஸ்ரஷ்டும்' என்றபடி ஆயிரமடங்காகப் பெருக்கி லோக க்ஷேமத்தின் பொருட்டுத் திருப்பித் தருவதற் காகவே

அவை தன்னிடம் சேர்த்துவைக்கப் பட்டிருக்கின்றன வென்பதை நொடியில் மறந்துவிடுகிறான். வேன ராஜனைப்போல்* அகங்காரத்தினால் அவன் சர்வ தேவத்துவத்தையும் தன்னிடத்தே ஆரோபித்துக்கொண்டு, மற்ற ஜனங்களை யெல்லாம் தன் முன் குப்புற விழுந்து நெளியவேண்டிய இழிந்த மானிடப் புழுக்களெனப் பாவிக்கிறான். அவனது இச்சை நல்லதா யிருப்பினும் கெட்டதா யிருப்பினும், அதற்கு மாறாய் நடப்பது பிரஜைகளின் பக்கல் பெரும் பாதகமாம். ஆகவே பாலனத்துக்கு மாறாகப் பீடனமும், ரக்ஷணத்துக்குப் பதிலாக பக்ஷணமுமே ஏற்படுகின்றன. சமாஜம் மெலிவுற்று நிர்வீர்யமா யிருந்தால், அரசனது கொடுமைகளை யெல்லாம் மௌனமாய்ப் பொறுத்துக் கொள்ளுகிறது; அதனால் சகஜமாய் விளையும் பலன் என்னவெனில், அரசனும் பிரஜைகளுமாகிய உபய பக்ஷத்தாரும் க்ஷீணித்துக் காலக்ரமத்தில் அதோகதியடைந்து, வீரமுள்ள அன்னிய ஜாதியாருக்கு எளிதில் இரையாகி விடுகிறார்கள்.

---

* வேனராஜனது கதை ஸ்ரீபாகவதத்தில் உள்ளது. இந்த மன்னவன் தன்னைப் பிரம்மா விஷ்ணு மஹேசுவரரைவிடப் பெரியவனென்று பாவித்துக்கொண்டு, சமஸ்த பூஜைகளையும் தனக்கே செய்யவேண்டுமென்று கட்டளையிட்டான். மகரிஷிகள் அவர்களையும் இவ் அகங்காரத்தை அகற்ற ஒருகால் அவனிடம் சென்று ஹிதோபதேசம் செய்ய முயன்றபோது, அவன் அவர்களைத் திரஸ்காரம்செய்து தன்னையே வணங்கும்படி உத்தரவுசெய்ய, ரிஷிகளின் கோபாக்னி அவனை எரித்துவிட்டது. திருமாலின் அவதாரமெனப்படும் பிருது மகாராஜன், இந்த வேனராஜனுடைய புஜத்தைக் கடைவதினின்று உற்பத்தியானவன்.

சமாஜ சரீரம் சொஸ்தமாயும் பலமுள்ளதாயும் இருக்குமிடத்து அரசனுக்கும் பிரஜைகளுக்கு மிடையில் கொடிய விரோத முண்டாகி, அந்த விரோதத்தின் எதிர்த் தாக்குதலினாலும் விதிர்விதிர்ப்பினாலும் கிரீடமும் கொற்றக்குடையும் செங்கோலும் சாமரமும் தூரத்தில் வீசி எறியப்பட்டு, சிம்மாசனம் முதலிய ராஜ வைபவச் சின்னங்கள் கண்காட்சிச் சாலைகளில் காப்பாற்றிவைக்கப்படும் விசித்ரமான பண்டைக்காலப் பொருள்களைப்போல் ஆய்விடுகின்றன.

எந்த மகாசக்தியின் உக்கிரமான பார்வைக்கு முன் மகா வீரவரேண்யர்களாகிய மகுடாதிபதிகளும் தம் சிங்காசனங்களில் நடுங்குகின்றனரோ, எந்த சக்தி சம்பன்னர்களின் கையில் விளங்கும் மாயமானைப் போன்ற சுவர்ண கலசத்தைப் பெற வீணாசை கொண்டு தோட்டி முதல் தொண்டைமான் வரையில் எல்லோரும் தலைவணங்கிப் பின் செல்லுகிறார்களோ, அத் தகைய வைசிய சக்தியின் விகாசமே மேற்சொல்லிய கடும் போராட்டத்தின் — அதன் எதிர்த்தாக்குதலின் — பலனும்.

“வித்தியாசக்தியே சகல சக்திகளிலும் சிறந்தது; அந்த வித்தையோ என்னைச் சார்ந்திருக்கிறது; ஆகவே சமாஜம் என்னுடைய அதிகாரத்துக்கு அமைந்து நடக்க வேண்டும்,” என்றான் பிராமணன். கொஞ்சகாலம் அப்படியே நடந்து வந்தது. அப்பொழுது க்ஷத்திரியன், “என் வாள்வலி இல்லாவிட்டால், ஓ பிராமணா, உனக்கு எவ்வளவு வித்தியா சாமர்த்தியம் இருப்பினும், உன் கதி என்ன ஆகும்? கணப்பொழுதில் உன்னைப் பூதலத்தி

விருந்து துடைத்துவிட மாட்டார்களா? ஆகவே நானே உயர்ந்தவன்," என்றான். உடனே வெளிக்கிளம்பியது பள பளவென்று பிரகாசிக்கும் வாளாயுதம் கண கணவென்று சத்திக்கும் உறையிலிருந்து! ஒப்புக்கொண்டது அதன் மகிமையைச் சமாஜம் வணங்கிய தலையுடன்! வித்யா உபாஸகனாகிய பிராமணன்கூட எல்லோருக்கும் முற்பட்டுராஜோபாஸகனாய்மாறினான். பிறகு வைசியன் முன்வந்து, "ஏ பைத்தியக்காரர்களே! 'அக்ஹண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் யேந சராசரம்' என்றபடி உலகமுழுதும் வியாபித்து ஜோதிப்பிரகாசமாய் விளங்குவதாக நீங்கள் சொல்லும் அந்தத் தெய்வமே சுவர்ணாங்கியான ராணியின் உருவம் தாங்கி சர்வ சக்தியுள்ள சவரனாக இருக்கிறது இதோ என் கையில்! பாருங்கள், இதன் கிருபையினால் நானும் சர்வசக்திமானாயிருக்கிறேன். ஓ பிராமணனே! உன்னுடைய ஜபம், தபம், வித்தை, புத்தி முதலியவற்றையெல்லாம் இதன் அனுக்கிரகத்தினால் இப்பொழுதே விலைக்கு வாங்கிவிடுவேன். ஏ மகாராஜ! உன்னுடைய அஸ்திர சஸ்திரங்களையும், சௌரிய பராக்கிரமங்களையும் இந்த என் தனலக்ஷ்மீ கடாக்ஷத்தினால் என் இஷ்ட காரிய சித்தியின் பொருட்டுச் சீக்கிரத்தில் உபயோகப் படுத்திக்கொள்ள வல்லேன். உன்னதமாயும் விஸ்தாரமாயுமுள்ள இந்த யந்திரசாலைகளைப் பார். இவைகளே என் தேன் கூண்டுகள்! இதோ பார், கோடிக் கணக்கான தேனீக் கூட்டங்களாகிய சூத்திரர் இடைவிடாமல் உழைத்து, அக்கூண்டுகளில் தேனைச் சேகரிக்கிறார்கள். யாருக்காகத் தெரியுமா? எனக்காகவே! நானே என் சுய பிரயோஜனத்

துக்காகவும் சுயலாபத்துக்காகவும் தக்க காலத்தில் பின் பக்கத்திலிருந்து அந்த சமஸ்த மதுவையும் ஒரு துளி கூட விடாமல் பிழிந்து எடுத்துக் கொள்வேன், தெரியுமா ?" என்று சொல்லுகிறான்.

பிராமண க்ஷத்திரியர்களின் ஆதிபத்திய காலத்தில் கல்விமேம்பாடும் நாகரிக அபிவிருத்தியும் உண்டானது போல், வைசியாதிகாரத்தில் செல்வத்திரட்சி உண்டாகிறது. நான்கு வருணத்தாரின் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும்படியான மோகனசக்தி வாய்ந்த கலகலவென் றொலிக்கும் அந்த நாணயங்களை உடைத்தாயிருப்பதனாலேயே வைசிய சக்திக்கு அவ்வளவு பெருமை ஏற்பட்டிருக்கிறது. வைசியனுக்குள்ள சம்பத்தெல்லாங் கூடி இந்தத் தனம் ஒன்றே யாகையால், எங்கே பிராமணன் அதைக் கவர்ந்துகொள்ளுகிறானோ, அல்லது க்ஷத்திரியன் பலாத்காரமாய் அதை ஆக்ரமித்துக் கொள்ளுகிறானோ என்று அவன் எப்போதும் பயப்பட்டுக்கொண்டே யிருக்கிறான். ஆகவே தற்காத்துக் கொள்ளும்பொருட்டுச் செட்டிமார் யாவரும் ஒரு கூட்டமாய் ஒற்றுமையாய் நடந்துகொள்வர். பணம் வைசியரின் கைவசமா யிருக்கிறது; அவர்களிடம் அதைவாங்கிக் கடன்பட்டாரிடத்திலிருந்து அவர்கள் உதைத்து வாங்கும் அளவுக்கு மிஞ்சிய வட்டியே அணைவாது நெஞ்சங்களையும் கலங்கச்செய்யும் கொடிய ஆயுதமாக விளங்குகிறது அவர்கள் கையில். தன பலத்தினால் ராஜ சக்தியை மட்டந் தட்டுவதில் வைசியர்கள் எப்போதும் ஊக்கமா யிருப்பர். வைசிய வர்க்கத்தின் தன தானிய விருத்திக்கு ராஜ சக்தியால் தடை உண்டாகா

வண்ணம் வணிகர் எந்நேரமும் விழிப்பாய் இருப்பர். ஆனால், இவ்வளவும் இருந்தும், அந்த சக்தி அரசரிட மிருந்து சூத்திர ஜாதிக்குச் செல்வதில் மாத்திரம் அவர்களுக்கு எள்ளளவும் இஷ்ட மில்லை.

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடும்' வணிகர் செல்லாத தேசம் எது? தாம் படியாதவர்களாய் இருந்தும், வியாபார நிமித்தம் ஒரு தேசத்தின் கல்வி, ஞானம், கலை, சாஸ்திரங்களை இன்னொரு தேசத்துக்குக் கொண்டு போகிறார்கள். பிராமண க்ஷத்திரியர்களின் அதிகார காலத்தில் சமாஜ சரீரத்தின் இருதயத்திலே திரட்டப் பட்ட கல்வி, நாகரீகம், கலைஞானம் என்னும் இரத்த மானது வாணிக ரூபமான இரத்த நாடிகளின் வழியாக வைசியர்களின் வெவ்வேறு கடைத் தெருக்களுக்குப் பாய்ந்து எங்கும் பரவுகின்றது. வைசிய சக்தி தோற்றி யிராவிட்டால், இக் காலத்தில் ஜகத்தின் ஒரு பாகத்தி லுள்ள ஞானத்தையும் கல்வியையும் ஆகார வஸ்துக் களையும் போக பதார்த்தங்களையும் மற்றொரு பாகத் துக்கு யார் கொண்டுபோயிருக்க முடியும்?

இனி, எவர்களுடைய சரீர உழைப்பினாலேயே பிராமணனுடைய செல்வாக்கும், க்ஷத்திரியனுடைய ஆதிபத்தியமும், வைசியனுடைய தன தானிய சம்பத் தும் சாத்திய மாகின்றனவோ, "அவர்கள் எங்கே? சமா ஜத்துக்கு, எவர்கள் இன்றியமையாத உண்மை அங்கமா யிருந்தும், சர்வ தேசங்களிலும் சர்வ காலங்களிலும், "ஜக்ஹந்யப்ரப்ஹவாஹ்தே" என்றபடி இழிகுலப் பிறப் பினர் என்று பெயரிடப் பெறுகின்றனரோ, அவர்களின் விருத்தாந்தம் என்ன? உயர்ந்த ஜாதியார் தமக்கே உரித்

தெனப் பாராட்டும் கல்வி ஞானங்களைப் பெற விரும்பிய பெரும் பாதகத்துக்காக நாக்கை அறுத்தல், சரீரத்தைப் பிளத்தல் முதலிய இலகுவான தண்டனைகளை எவர்களுக்குக் கருணை கூர்ந்து பாரத தேசம் விதித்ததோ, பாரதநாட்டின் அந்த "உயிர்ப் பிணங்களும்," இதர தேசங்களின் "பாரம் சுமக்கும் மிருகங்களும்" ஆகிய சூத்திரர்களுண்டே—அவர்களின் கதி என்ன? ஐயகோ! பாரத தேசத்தைப்பற்றி யான் என்னென்று சொல்லுவேன்! சூத்திரர்களின் செய்தி இருக்கட்டும்,—இப்பொழுது பாரத நாட்டின் பிராமண்யம் ஐரோப்பிய பண்டிதர்களிடத்தும், க்ஷத்திரியத்துவம் அரசாளும் ஆங்கிலேயரிடத்தும், வைசியத்துவமும் ஆங்கிலேயரிடத்தும்—எவர்களின் இரத்தத்திலும் சதையிலும் வியாபாரத்தன்மை ஊறியிருக்கிறதோ அப்படிப்பட்ட ஆங்கிலேயரிடத்து—விளங்க, கேவலம் "பாரம் சுமக்கும் மிருக"த்துவமும் கேவலம் "சூத்திரத்துவ"மும்தான் பாரதவாசிகளுக்கே இப்போது மிச்சமாய்த் தங்கியிருக்கிறது. உட்செல்லற்கரிய காரிருண் மேகபடலம் இப்பொழுது நம்மையெல்லாம் ஒரே தன்மையாய்க் கவித்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுதோ விடா முயற்சியு மில்லை, காரிய சாகசமுமில்லை; இருதய பலமுமில்லை, மனோதைரியமு மில்லை; அவமானத்தில் ரோஷமுமில்லை, அடிமைத்தனத்தில் அருவருப்பு மில்லை; உள்ளன்போ ஓடியொளிந்தது, ஆசையோ அழிந்தது, பௌருஷமோ பூஜ்யமாய் விட்டது; போகாமல் நிலைத்திருப்பவை பொருமை, சுயஜாதித் துவேஷம், மெலிந்தவர்களை எவ்விதத்திலாவது சர்வநாசம் செய்

வதில் குதூகலம், பலவான்களின் பாதங்களை நாய்போல் நக்குதல் என்னும் இவைகளேயாம். இப்பொழுது பரம திருப்தி செல்வச் செருக்கிலும் அதிகார ஆடம்பரத்தி லும், பக்தி சுயகாரிய சாதனத்தில், ஞானம் அநித்திய வஸ்துக்களைச் சம்பாதிப்பதில், யோகம் கோரமான ஆசுர ஆசாரங்களில், கர்ம சிரத்தை பரசேவையில், நாகரீகம் அன்னிய ஜாதியாரின் துராசாரங்களை அனு சரிப்பதில், வாக்குச் சாதுரியம் தூஷணபாஷையில், இலக்கியச் சிறப்பு செல்வர்களின் முகஸ்துதியில் அல் லது அசப்பியமான சிங்கார வர்ணனைகளில்! இவ்வளவு லக்ஷணமாயிருக்கிறது நமது நிலைமை! தேசமுழுவதுமே சூத்திரத்தன்மையான நிலைமைக்கு வந்திருக்கையில், சூத்திர ஜாதியைப்பற்றித் தனியே பேசுவ தென் னையோ? பாரத தேசத்தைத் தவிர்த்து மற்றத் தேசங் களில் சூத்திரர் சிறிது விழித்துக்கொண்டதாகத் தெரி கிறது; ஆனால் அவர்களுக்குக் கல்வி இல்லை; சூத்திர ரின் இயற்கைக் குணமாகிய சுயஜாதித் துவேஷமும் அவர்களை விட்டுப் போகவில்லை. மற்ற வகுப்பாரைவிட அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருந்தும் என்ன பயன்? பத்துப் பேருக்குக் கோடி ஜனங்களின் பலத்தை யளிக்க வல்ல அந்த ஒற்றுமைக் குணம் சூத் திரருக்கு இன்னும் வெகுதூரத்தில் இருக்கிறது; ஆகவே சூத்திர ஜாதி பாதந்திரமாயிருப்பது இயல்பே யாம்.

ஆயினும் ஆசை வைக்க இடமுண்டு. கால மகிமை யினால் பிராமணாதி உயர்வர்ணத்தார் சூத்திரரின் தாழ்ந்த நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டு, சூத்திரர் உச்ச ஸ்தா

ணத்துக்கு உயர்த்தப்பட்டு வருகிறார்கள். பூர்வம் ரோமரால் அடிமைகொள்ளப்பட்டுச் சூத்திர பூமியா யிருந்த ஐரோப்பா கண்டம் இப்போது க்ஷாத்திர பாராக்கிரமத்தினால் நிறைந்திருக்கிறது. மகா பலம் பொருந்திய சீன தேசம் நம் கண்ணுக்கு முன்பாகவே அதிவேகமாய்ச் சூத்திரத்தன்மையை அடைந்தது. கணக்கில் வராத ஜப்பான்தேசமோ ஆகாச வாணம்போல் திடீரெனக் கிளம்பித் தன் சூத்திரத்தன்மையை வீசி யெறிந்துவிட்டுப் படிப்படியாய் உயர்வர்ணத்தாரின் அதிகாரங்களை ஆக்கிரமித்து வருகிறது. இதாலியும் க்ரீஸும் நூதனமாக க்ஷத்திரியத்தன்மை யடைந்ததும், துருக்கி ஸ்பெயின் முதலிய தேசங்கள் க்ஷீணதசை யுற்றதும் இங்கே ஆராய்வதற் குரியவை யாம்.

ஆன போதிலும், சூத்திரர் தம் சூத்திரத்தன்மையுடனேயே பிராதானியத்துக்கு வரும்படியான ஒரு காலமும் நேரும். அதாவது, இப்போது சூத்திர ஜாதி வைசியத்துவத்தையோ க்ஷத்திரியத்துவத்தையோ அடைந்து சீரும் சிறப்பும் பெற்றுவருவதுபோ லல்லாமல், சர்வ தேசங்களிலு முள்ள சூத்திரர் சூத்திரராகவே யிருந்து, சூத்திர சுவபாவத்தோடு, சூத்திரப் பழக்கவழக்கங்களோடேயே சமாஜத்தில் ஏகாதிபத்யம் அடையும்படியான காலமும் வரும். இந்த நவீன சக்தியின் அருணோதய ஒளி மேற்குச் சீமையில் ஏற்கெனவே மெல்லத் தோன்றத் தொடங்கிவிட்டது. இந்தப் புதிய உற்பாதத்தின் பலாபலன்கள் கடைசியில் எப்படிப் பரிணமிக்குமோ என்னும் கவலையானது புத்திமான்களின் மூளையைக் கலக்கிக்கொண் டிருக்கிறது.

ஸோஷியலிஸம் (ஸாமாஜிக வாதம்)* ஆனர்க்கிஸம்†

---

* ஸோஷியலிஸம்—ஸாமாஜிக வாதம். இந்தக் கொள்கை கி. பி. ௧௮௬௫-ம் ஆண்டில் யூரோப்பில் உற்பத்தியாகிப் பல தேசங்களிலும் பெருவாரியாய்ப் பரவிற்று; இன்னமும் பரவிவருகிறது. அர்த்தசாஸ்திரிய நீதியே இக் கொள்கைக்கு முக்கிய ஆதாரம். இக்கொள்கையில் பல பேதங்கள் உண்டு. மனிதருள் ஒவ்வொருவரிடத்தும் தனித்தனியே உள்ள மூலதனத்தை ஒரு பிண்டமான சமஷ்டி மூலதனமாக்கி விடவேண்டும் என்பதும், சமாஜத்தில் உள்ள சொத்துக்கு எல்லோருக்கும் சமான அதிகாரமிருக்கவேண்டுமேயன்றி, எவருக்கும் பிரத்தியேகமாக ஒரு சொத்துமிருக்கக் கூடாதென்பதும் இக் கொள்கையின் கருத்து. அதனால், உழைப்பாளிகள் கேவலம் கூலிமாத்திரம் பெற்று ஜீவிப்பது போய், முதலாளிகளுக்குச் சமமான நிலைமையடையா விட்டாலும், இப்போது உள்ளதைவிடப் பல மடங்கு அதிகமான லாபத்தைப் பெறக் கூடியவர்களாயிருப்பார்கள் என்று இக் கொள்கையினர் கூறுகிறார்கள்.

† ஆனர்க்கிஸம்—அராஜக வாதம்—இக் கொள்கையை முதலில் உண்டாக்கினவன் பகூனின் (Bakunin) என்பவன். இவன் கி.பி. ௧௮௧௪-ம் ஆண்டில் பிறந்தவன். இக் கொள்கையின் கருத்து: சகல விதமான வெளிப்புறத்து அதிகாரத்தையும் ஆளுகையையும் எதிர்க்கவேண்டும். ஒவ்வொருவனும் தன் சுய இயற்கையொழுங்கின்படி நடந்து வந்தால், வேறு எவ்வித இராஜாதிகாரமாவது சட்டமாவது தேவையில்லை. சுயாதீனக் கட்டுப்பாடாய் வாழும் கூட்டங்களெல்லாம் சுயாதீனப்பான்மையாய் ஒன்று சேர்ந்திருத்தலே சமாஜத்துக்கு லக்ஷியமாயிருக்கவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இப்பொழுதே ஏற்படும் பொருட்டு எல்லோரும் எவ்விதமாகவாயினும் முயற்சி செய்யவேண்டும்.

(அராஜக வாதம்), நிஹிலிஸம் (சூனிய வாதம்)* முதலிய கட்சிகள் இனி உண்டாகப்போகும் சமாஜ விப்லவத்தின் முன்னணியப் படை போல்வன வாம்.

யுகயுகாந்தரமாகச் செய்யப்பட்டுவரும் கொடுமைகளின் பலனாக, சூத்திரர் யாவரும், ஒன்று நாய்போல் உயர்வகுப்பாரின் காலை நக்கும் நீச சுபாவ முடையவராகவோ, அல்லது கொடிய விலங்குகளைப்போல் குரூரத் தன்மை கொண்டவர்களாகவோ, இருக்கின்றனர். மேலும் அவர்களது ஆசைகளும் கோரிக்கைகளும் எப்போதும் பங்கமடைந்தே வருகின்றன. ஆதலால் ஊக்கமும் விடாமுயற்சியும் அவர்களிடத்தில் முற்றும் முயற்கொம்பா யிருக்கின்றன.

மேற்குச் சீமையில் கல்வி அதிகமாய்ப் பரவி யிருந்தும், சூத்திரர் முன்னுக்கு வருவதற்கு ஒரு பெரிய இடையூறு உண்டு; அது குணத் தகுதியை அனுசரித்து ஏற்பட்டிருக்கும் ஜாதி நிர்ணயமே யாம். பாரத தேசத்திலே பூர்வ காலத்தில் அநுஷ்டிக்கப்பட்டுவந்த இந்த குணகத † ஜாதியே சூத்திரரைக் கையுங் காலுங் கட்டி மேலெழ வொட்டாமல் அழுத்தி வந்தது. முதலாவது,

---

*நிஹிலிஸம்—சூனிய வாதம்—இக் கொள்கையும் அராஜக வாதத்தைப் போன்றதே யாயினும், இவ் இரண்டினுக்குள்ளும் சிற்சில விஷயங்களில் பேதமுண்டு. கி.பி. ௧அசுஉ-ம் ஹூத்தில் ருஷியாவிலே இக் கொள்கை தோன்றியது. அத் தேசத்திலேயே இக்கொள்கையினர் முக்கியமாய் இருக்கின்றனர். கடவுள், அரசாங்கம், விவாகம்— இம் மூன்றும் மித்தை யென்பதே இக் கொள்கையின் சுருக்கமான கருத்து.

† குணகத=குணத்தைப்பற்றிய.

சூத்திரருக்குக் கல்வி கற்க வாகிலும், பொருள் சம்பாதிப்பதற் காகிலும் அவகாசம் கிடைப்பதே அரிது; அல்லாமலும், விசேஷ சக்தியும் புத்தியும் உள்ள ஒருவன் எப்போதாவது சூத்திர குலத்திற் பிறந்துவிடும் பக்ஷத்தில், உயர்குலத்தார் உடனே அவனுக்குப் பெரிய பட்டங்கள் அளித்துக் கௌரவித்துத் தம் குழாத்தில் சேர்த்துக்கொண்டு விடுவார்கள். அவனது செல்வமும் ஞான சக்தியும் அன்னிய ஜாதிக்கு அனுகூலமாக உபயோகிக்கப்பட்டதனால், அவனது சுயஜாதி ஜனங்களுக்கு அவனது சாமர்த்தியத்தினால் யாதும் பிரயோசன மில்லாது போயிற்று. அது மாத்திர மன்றி, உயர்குலத்தார் தம் தம் ஜாதிகளில் ஒன்றுக்கும் உதவாதவர்களையும் கழிவிடையானவர்களையும் விலக்கிச் சூத்திர ஜாதியில் தள்ளினமையால், சூத்திரரின் தொகை அதிகமாய்விட்டது.

குல கோத்திர நிச்சய மில்லாத வசிஷ்டர், நாரதர், சத்யகாம ஜாபாலர், வியாசர், கிருபர், துரோணர், கர்ணன் முதலானவர்கள் அவரவர்களின் வித்தை அல்லது பராக்கிரமத்தை முன்னிட்டுப் பிராமணர் அல்லது க்ஷத்திரிய ஜாதிக்கு உயர்த்தப்பட்டார்கள். *

* (௧) வசிஷ்டரின் பிதா பிரம்மா; மாதா தெரியவில்லை. (௨) நாரதரின் தாய் ஒரு வேலைக்காரி; தந்தை தெரியவில்லை. (௩) ஸத்யகாம ஜாபாலரின் தாய் ஜபாலை யென்னும் வேலைக்காரி; தகப்பனார் யாரோ தெரியவில்லை. (௪) வியாசரின் தந்தை பராசரரென்னும் பிராமணரிஷி, தாய் மச்சகந்தி என்னும் செம்படப் பெண். (௫) கிருபாசாரியாரின் தந்தை சரத்வான் கௌதமன் என்னும் பிராமண ரிஷி; தாய் ஜானபதி யென்னும்

இப்படி இவர்கள் அடைந்த உயர்வினால், விலைமாது, வேலைக்காரி, செம்படவன், சாரதி* இந்தக் குலங்களுக்கு என்ன லாபம் உண்டாயிற்றென்று யோசிக்க வேண்டும். இதற்கு மாறாக, பிராமண, க்ஷத்திரிய, வைசிய குலங்களிலிருந்து தள்ளுண்டவர்களெல்லாம் ஓயாமல் சூத்திர ஜாதியைச் சேர்ந்து அதைப் பெருகச் செய்தனர்.

இக் காலத்திலே பாரத நாட்டிலே சூத்திர குலந்திற் பிறந்த ஒருவன் கோடீசுவரனா யிருந்தாலும்சரி, மகாபண்டிதனா யிருந்தாலும் சரி, தன் சுய ஜாதியை விட்டு விலக அவனுக்கு அதிகாரம் இல்லை. ஆகவே, அவனது கல்விச் சிறப்பு, புத்தி நுட்பம், செல்வநிறைவு எல்லாம் அவனது ஜாதிக்குள்ளாகவே தங்கி, அவனது இனத்தாருக்குப் பயன்படுகிறது. இவ் வாறு பாரத

தேவதை. (கூ) துரோணரின் பிதா பரத்துவாசரென்னும் பிராமண முனிவர்; மாதா கிருதாசி என்னும் அப்ஸர ஸ்திரீ. (எ) கர்ணனது தாய் கன்னிப்பருவத்தில் கர்ப்பமடைந்த குந்தி; பிதா சூரியதேவன். இச் செய்திகளின் விவரத்தை (க)-க்கு மகாபாரதம், ஆதிபர்வம் கஎ௪-ம் அத்., அல்லது ரிக்வேதம், எ, ௬௬, கக-க௬; (உ)-க்கு ஸ்ரீமத் பாகவதம் க-ம் ஸ்கந்தம், கூ-ம் அத்.; (௬)-க்குச் சாந்தோக்கிய உபநிஷத், ௪-ம் ப்ரபாடகம், ௪-ம் கண்டம்; (௪), (ரு), (கூ), (எ)-க்கு மகாபாரதம், ஆதிபர்வம் க௦ரு, க௬௧, கககக இந்த அத்தியாயங்களைப் பார்க்க.

* குந்திதேவி கன்னிப்பருவத்தில் இருக்கையில் கர்ணன் பிறந்தபடியால், அவள் மானத்துக்கு அஞ்சிக் குழந்தையை ஆற்றில் எறிந்துவிட்டாள். ஒரு தேரோட்டி (சாரதி) அந்தக் குழந்தையை எடுத்து வளர்த்தமையால், கர்ணன் சாரதியின் மகனென்று எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள்.

தேசத்தில் ஜன்மத்தினால் ஏற்பட்ட ஜாதி நிர்ணயமானது, அந்தந்த ஜாதியிற் பிறந்தவர்கள் ஜாதி வரம்பை மீறாமல் தம் தம் ஜாதியிலிருந்தே உயர்வு அடைவதற்கு அனுகூலமாயிருக்கிறது. பாரத தேசத்தில் ஜாதி பேதம் பாராட்டாமல் நியாய பரிபாலனம் செய்யும் துரைத்தனம் நிலைத்திருக்கிற வரையில், தாழ்ந்த ஜாதிகளின் முன்னேற்றம் இவ்வாறு நடந்துகொண்டே வரும்.

சமாஜத் தலைமையானது வித்யாபல முள்ளவர்களின் கையி லிருந்தாலும் சரி, ஆயுதபலம் அல்லது தனபலம் உள்ளவர்களின் கையி லிருந்தாலும்சரி, அந்த சக்திக்கு மூலாதாரமா யிருப்பது பிரஜைத் திரளாகிய ஜன சமுதாயமே யாம். அவ் விதத் தலைமை வகிக்கும் வகுப்பார் இந்தச் சக்தி யாதாரத்திலிருந்து எவ்வளவுக் கெவ்வளவு தூரம் விலகியிருக்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் துர்ப்பல மடைவது திண்ணம். ஆனால், எவர்களிடத்திலிருந்து இந்த ஆதாரமானது சாம தான பேத தண்ட மெனும் நால் வகை உபாயங்களில், எந்த உபாயத்தினாலாவது பிரத்தியக்ஷமாக வாயினும் பரோக்ஷமாக வாயினும் பெறப்படுகிறதோ, அவர்களை, இந்த அதிகாரிவர்க்கத்தார் எதிலும் சேர்க்காமல் ஒதுக்கி வைத்திருப்பது விதியின் விபரீத கோலமோ, மதியின் மாயா விலாஸமோ, என்னவோ தெரியவில்லை. காலக்கிரமத்தில் பௌரோகித்ய சக்தியானது தன் சக்திக்கு ஆதாரமாகிய பிரஜைத் திரளினின்றும் தன்னை முற்றிலும் விலக்கிக்கொண்ட போது, அக் காலத்தில் பிரஜைகளின் சகாயத்தைக் கொண்ட ராஜ சக்தியால் தோல்வியடைந்தது. ராஜ சக்தியும் தன்னைச் சர்வ சுதந்

திரமுள்ளதென்று எண்ணிக்கொண்டு, தனக்கும் பிரஜா சமூகத்துக்குமிடையில் அகன்ற வெள்ளிடையை உண்டாக்கிய பொழுது, தன்னைவிட அதிகமாகப் பிரஜைகளின் சகாயத்தைப் பெற்ற வைசியகுலத்தாரின் கையால் நாசத்தையோ அல்லது சூத்திரப் பாவையைப் போல் ஆட்டிவைக்கப்படும் தன்மையையோ அடைந்து போயிற்று. இப்போது வைசியர்களுக்குக் காரியசித்தியாகிவிட்டபடியால், இனி பிரஜைகளின் சகாயம் அநாவசியம் என்று எண்ணி அவர்களும் பிரஜைத் திரளினின்று முற்றிலும் விலகிக்கொள்ள முயல்கிறார்கள்; ஆகையால் இந்த சக்தியும் அழிவதற்கு இது அங்குரார்ப்பண மாகிறது.

சாமானிய ஜனங்கள் சமஸ்த சக்திகளுக்கும் தாமே ஆதாரமா யிருந்தும், தமக்குள்ளாகவே பரஸ்பரம் அனந்தமான பேதங்களை உண்டாக்கிக் கொள்ளுகிறபடியால், தமக்கு உரிய நியாயமான அதிகாரங்களையெல்லாம் இழந்துபோகின்றனர். அவர்களுக்குள் இவ்விதத் தொடர்பு இருக்கிற வரையில், அவர்கள் இந்த நிலையிலேயேதான் இருப்பார்கள்.

பொதுவான ஆபத்தாவது பொதுவான துவேஷம் அல்லது பிரீதியாவது ஜனங்களை ஒன்றுய்ச் சேர்த்துக் கட்டும் பந்தமா யிருக்கிறது. துஷ்ட மிருகங்கள் எந்த நியமத்துக் குட்பட்டு ஒரு மந்தையாய்ச் சேர்கின்றனவோ, அதே நியமத்துக்கு வயப்பட்டு மனிதர்களும் ஒரு கூட்டமாய்ச் சேர்ந்து, பிரத்யேக ஜாதி அல்லது தேசவாசி ஜனமாக அமைகிறார்கள். சுய ஜாதியிலும் சுய தேசத்திலும் கொண்ட அன்பின் மேலீட்டினால்,

பாரவீகத்தின்மேல் கிரேஸும், கார்த்தாகத்தின்மேல் ரோமும், காபிரிகளின்மேல் அராபியரும், மூர் ஜாதியாரின்மேல் ஸ்பெயினும், ஸ்பெயின்மீது பிரான்ஸும், பிரான்ஸின் மேல் இங்கிலாந்தும் ஜெர்மனியும், இங்கிலாந்தின்மேல் அமெரிக்காவும் காட்டியதுபோல், வேற்று ஜனங்களின் மேலும் நாட்டின்மேலும் உண்டாகும் கடும் பகையே ஒரு தேசத்தார் இன்னொரு தேசத்தின்மேல் விரோதம் சாதிப்பதற்காகத் தம்மில் ஒன்று சேர்ந்து, அவர்கள்மேல் ஆதிபத்தியங் கொள்வதற்கு முக்கியமான காரணம் என்பதில் சந்தேகமில்லை.

தன்னல விருப்பமே தன்னல மறுப்புக்கு முதற் குரு. வியஷ்டியின் நலத்தின் பொருட்டே சமஷ்டியின் நலத்தை முதலிற் பாராட்டவேண்டியிருக்கிறது. சுஜாதியின் நலத்திலேயே தனிப்பட்ட ஒருவனது நலமும் இருக்கிறது; சுஜாதியின் க்ஷேமத்திலேயே தனிப்பட்ட ஒருவனது க்ஷேமமும் இருக்கிறது. பலர் ஒன்று கூடி முயன்றாலன்றி, அநேக காரியங்கள் எவ் விதத்திலும் நடைபெறா; தன்னைக் காத்துக்கொள்வது கூட முடியாமை யாய்விடும். இந்தத் தன்னலப் பாதுகாப்பின்பொருட்டுப் பலர் பரஸ்பர சகாயமாய்ச் சிநேக பாவத்தோடு கூடுவதைச் சர்வ தேசங்களிலும் சர்வ ஜாதிகளிலும் காணலாம். ஆனால் இந்தத் தன்னலத்தின் விரிவு அந்தந்த தேசத்தாரின் இயல்புக்குத் தக்கவாறு அகன்றும் குறுகியும் இருக்கும். மக்களைப் பெறுவதும், அன்றன்றைய வயிற்றுப்பாட்டுக்குப் போதிய ஜீவனம் செய்வதும், மேற்குலத்தாரின் ஆசாராநுஷ்டானங்களுக்கு எவ்வகை முட்டுப்பாடும் உண்டாக்காதிருத்த

னும் ஆகிய இவையே பாரதவாசிகளுக்கு முற்றான தன்னல நிறைவாம்—சம்பூர்ண ஸ்வார்த்த சித்தியாம்! இதைவிட இக்காலத்துப் பாரததேசத்துக்கு மேலான ஆசை ஒன்றுமில்லை; இதுவே பாரத தேசத்து வாழ்க்கை யெனின் உயர்ந்தபடி.

பாரத வருஷத்தின் இப்போதைய பரிபாலனத்தில் சில தோஷங்கள் இருந்தபோதிலும், மிகச் சிறந்த குணங்களும் அதில் விளங்குகின்றன. எல்லாவற்றிலும் சிறந்த நலம் என்ன வெனில், பாடலிபுத்திர சாம்ராஜ்ஜியம் அழிவெய்தியதிலிருந்து இதுகாறும் பிரிட்டிஷ் துரைத்தனத்தைப்போல் தேசமுழுவதும் பரவிச் செங்கோல் செலுத்திய இவ்வளவு சக்தியுள்ள ஆளுகையின்கீழ் நமது தேசம் ஒருபோதும் இருந்ததில்லை. வைசியாதிகாரத்தின் எந்த முயற்சியினால் உலகத்தின் ஒரு மூலையிலுள்ள பண்டங்கள் மறுமூலைக்கு வந்து விழுகின்றனவோ, அந்த முயற்சியின் பயனாகவே தேச தேசாந்தரங்களின் எண்ணங்களும் கருத்துக்களும் பாரததேசத்தில் "அங்கிங்கெனாதபடி யெங்கும்" புகுந்து வியாபித்து வருகின்றன. இந்த எண்ணங்களிலும் கருத்துக்களிலும் சில உண்மையாகவே மிக்க நன்மை பயப்பனவாகவும், சில தீங்கு செய்வனவாகவும், இன்னும் சில, இத் தேசத்தாருக்கு யதார்த்தத்தில் நலமானவை இன்னவை யென்பதை நிர்ணயிப்பதில் விதேசியர்களின் அறியாமையையும் சக்தியின்மையையும் காட்டுவனவாயும், இருக்கின்றன.

ஆனால் இந்த குணதோஷராசியைப் பிளந்து கொண்டு பாரததேசத்தின் பிற்காலவைபவஜோதி உதித்

தெழுவதை நிச்சயமாய்க் காணலாம். எப்படி யெனில், பிராசீன சுஜாதீய ஆதர்சங்களுக்கும் நவீன விஜாதீய ஆதர்சங்களுக்கும் இடையில் உண்டாகும்போரினாலும் எதிர்த்தாக்கினாலும்பாரதமாதாநெடுந்தூக்கத்திலிருந்து மெல்ல மெல்லக் கண்விழித்து வருகிறாள். அவள் பிசகுகள் செய்யக்கூடும்,—செய்யட்டும், அதனால் பாதகமில்லை. நாம் செய்யும் சகல காரியங்களிலும் தப்புந் தவறுகளுந்தான் நமக்குப் பரமகுரு. தவறி விழுகிறவனே நேர்வழி கண்டு நிமிர்ந்து நடக்க வல்லவன். மரங்கள் ஒருகாலும் பிழை செய்வதில்லை. கற்களும் பிறழ்ந்து விழுவதில்லை. விலங்குகள் இயற்கை விதிகளை மீறிச் செல்வது வெகு அபூர்வம். ஆனால் பூதேவர்கள் உற்பத்தியாவது பிழை பிசகுகள் நிறைந்த மானவ குலத்திலேயே யாம். தந்ததாவனமுதல்* தகனக் கிரியை வரையில் சமஸ்த கருமங்களையும், காலையில் விழித்தெழுவது முதல் இரவில் படுக்கப் போகிறவரையில் சகலமான எண்ணங்களையும் நமக்காகப் பிறர் புங்கானுபுங்கமாய் நிர்ணயித்து வைப்பதானால், நாம் சுதந்திரத்துடன் சுயமாய்ச் சிந்திப்பதற்கு வேறென்ன இருக்கிறது? மனிதர்கள் முனி (ரிஷி) களாவதும் மநீஷி (மேதாவி) களாவதும், அவர்கள் மனன சீலராயிருப்பதா லன்றோ?—சிந்தித்தலாலும், தர்க்கித்தலாலும், சங்கற்பித்தலாலு மன்றோ? பயிற்சியின்றேல், ஆழ்ந்து சிந்திக்கும் சக்தி அற்றுப்போகின்றது, தமோ குணம் விருத்தியாகின்றது, மந்தபுத்தி மேலிடுகின்றது, சேதனத்தை ஜடத்துவம் சூழ்ந்து கொள்ளுகின்

* தந்ததாவனம்=பல் விளக்குதல்.

றது. அப்படியிருந்தும், இப்பொழுதுகூட, ஒவ்வொரு மதோபதேசியும், ஒவ்வொரு சமாஜத்தலைவரும் சமாஜ காரியங்கள் சீராய் நடைபெறுவதற்காகப் புதிய நியமங்களையும் கட்டுதிட்டங்களையும் ஏற்படுத்த ஆவல்கொள்ளுகிறார்கள். தேசத்தில் கட்டுதிட்டங்களுக் கென்ன, குறைவா? வேண்டிய கட்டுதிட்டங்கள் ஏற்கெனவே இல்லையா? கட்டுதிட்டங்களின் கொடுமையால் தேச முழுவதும் நாசமடைந்துவருகிறதே—இது யார் மண்டையிலாவது நுழைகிறதா?

சம்பூரண சுவாதீனமான சுயேச்சாதிபத்தியத்தில் அரசன் வெல்லப்பட்ட ஜாதியாரை அவ்வளவு அவமதிப்பாய் நடத்துவதில்லை. அத்தகைய சுயேச்சாதிபத்தியத்தில் சகலபிரஜைகளின் அதிகாரங்களும் சமானமாகவேயிருக்கும்; அதாவது ராஜாங்க விவகாரங்களைப் பற்றிக் கேள்வி கேட்கவாவது அதிகாரம் செலுத்தவாவது எந்தப் பிரஜைக்கும் சுதந்திரம் கிடையாது. ஆகவே, ஜாதிபேத முதலியவைகளை முன்னிட்டு விசேஷ சுதந்திரங்கள் யாருக்காவது இருப்பதற்கு அதிக இடமில்லை. ஆனால் ஆளும் ஜாதியாரால் ராஜ்ஜிய பரிபாலனம் நிர்ணயிக்கப்படுகிற விடத்தும், வெல்லப்பட்ட ஜாதி குடியரசுமுறையான ஆளுகைக்கு உட்பட்டிருக்குமிடத்தும், ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையிலுள்ள சம்பந்தம் வெகுதூர மாகிவிடுகிறது; அன்றியும் பிரஜைகளின் க்ஷேமத்தின் பொருட்டு உபயோகிக்கப்பட்டால் சொற்ப காலத்துக்குள்ளாகவே அவர்களுக்கு மட்டற்ற நன்மையைச் செய்திருக்கக் கூடிய சக்தியின் பெரும்பாகமானது, பிரஜைகளை முற்றி

லும் தமக்கு உட்பட்டிருக்குமாறு செய்யும் முயற்சியில் துரைத்தனத்தாரால் வீணே பிரயோகிக்கப்படுகிறது. ரோம ராஜ்ஜியம் குடியரசாயிருந்த காலத்திற்காட்டிலும் சக்ரவர்த்திகளின் ஆளுகையிலிருந்த காலத்தில், அந்த ராஜ்ஜியத்தின் விதேசிய பிரஜைகளுக்கு இக்காரணத்தினாலேயே அதிக சௌக்கிய முண்டாயிருந்தது. இந்தக் காரணத்தினாலே பௌல் என்னும் கிறிஸ்தவ அப்போஸ்தலன், வெல்லப்பட்ட யூத ஜாதியைச் சேர்ந்தவனாயிருந்தும், தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை விசாரிக்குமாறு ரோம சக்ரவர்த்தியாகிய கேஸருக்கு விண்ணப்பம் செய்துகொள்ள அனுமதிபெற்றான். எவனோ ஓர் ஆங்கிலேயன் நம்மைக் கரியர் அல்லது 'நேட்டிவ்' அல்லது 'நிக்கர்' என்று சொல்லி, அநாகரிகரென்று நம்மை இழித்துக் கூறினால், அதனால் நமக்கு லாபமுமில்லை நஷ்டமுமில்லை. ஜாதிபேதத்தினால் நமக்குள்ளேயே அதைவிட எவ்வளவோ அதிகமான துவேஷபுத்தியும் அவமதிப்பு உணர்ச்சியும் பரஸ்பரம் இருக்கின்றன. மேலும் மூர்க்கனான க்ஷத்திரிய அரசன் எவனாவது தமக்குச் சகாயம் செய்வதாயிருந்தால், பிராமணர் மறுபடியும் சூத்திரரின் நாக்குகளை அறுக்கவும் சரீரங்களைப் பிளக்கவும் திருவுள்ளம் பற்றமாட்டார்களென்று யார் கூறமுடியும்? கிழக்கு ஆரியாவர்த்தத்தில் சகல ஜாதிகளுக்குள்ளும் ஸாமாஜிக உன்னதியின் பொருட்டு ஒற்றுமையுண்டாகிவருவதும், மகாராஷ்ட்ர தேசத்தில் பிராமணர்கள் மராட்ட ஜாதியைப் புகழ்ந்து ஜயங்கள் சங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித்திருப்பதும் சுயநலமற்ற சுத்தமான அந்தக்கரணத்திலிருந்து உண்டானவையென்று

தாழ்ந்த ஜாதிகளுக்கு இன்னமும் நம்பிக்கை உண்டாக வில்லை.

ஆனால் பாரத சாம்ராஜ்ஜியம் தம் அதிகாரத்தி லிருந்து நழுவிவிடுவது ஆங்கிலேய ஜாதிக்கு அபாயமாய் முடிந்து அழிவையுண்டாக்குமென்னும் எண்ணம் ஆங் கில ஜனங்களின் மனத்தில் கிரமமாய்த் தோற்றிவரு கிறது. ஆகவே எவ்விதத்தினாலாவது பாரத தேசத்தில் இங்கிலாந்தின் ஆதிபத்யத்தைச் சம்ரக்ஷிக்கவேண்டும்; இதை நிறைவேற்றுவதற்கு உபாயம்—பிரிட்டிஷ் ஜாதி யாரின் பெருங்கௌரவத்தையும் மேன்மையையும் ஒவ் வொரு பாரதவாசியின் உள்ளத்திலும் ஓங்கி நிலைக்கச் செய்வதே யென அவர்கள் நினைக்கிறார்கள். பரிகாசத் துக்கும் பரிதாபத்துக்கும் இடமான இந்த எண்ணம் ஆங்கிலேயருக்குள் பலப்பட்டுவரும் விதத்தையும், இந்த எண்ணத்தைக் காரியத்தில் நிறைவேறுவதற்கு அவர் கள் செய்யும் முயற்சி உத்தரோத்தரமாய் வளர்ந்துவரும் விந்தையையும் பார்க்கச் சிரிப்பும் அழுகையும் ஏக காலத் தில் உண்டாகின்றன. தைரியம், விடாமுயற்சி, ஜாதீய ஐகமத்யம் முதலிய எந்த குணங்களால் ஆங்கிலே யர் இந்த பாரத சாம்ராஜ்யத்தைச் சம்பாதித்தார்களோ, எப்போதும் இமைகொட்டாமல் காரியத்தின்மேல் கண்ணுயிருக்கும் அவர்களின் எந்த வர்த்தக புத்திநுட் பமானது விக்ஞான வித்தையைத் துணையாகக்கொண்டு எல்லாச்செல்வத்துக்கும் விளைநிலமாகிய பாரதபூமியை யும் இங்கிலாந்தின் பிரதான வியாபாரஸ்தலமாக மாற்றி விட்டதோ,—அத் தகைய குணாதிசயங்க ளெல்லாம் அவர்களின் ஜாதீய சுபாவத்திலிருந்து அகலாதிருக்

கும் வரையில், பாரத தேசத்தில் அவர்களின் சிம்மாசனம் அசைவின்றிச் சாசுவதமாய் இருக்க வல்லது என்பதை பாரத நாட்டில் வசிக்கும் ஆங்கிலேயர் மறந்துவிடுகின்றனர் போலும். இந்தக் குணங்களெல்லாம் ஆங்கிலேயரிடம் இருக்கும்வரையில் இப்படிப்பட்ட பாரத ராஜ்ஜியங்கள் எத்தனை ஆயிரம் போனாலும், திரும்பவும் அத்தனை ஆயிரம் அவர்கள் சம்பாதிக்க வல்லவர்கள் என்க. ஆனால் இந்தச் சகல குணப்பிரவாகத்தின் வேகமும் குறைந்துவிட்டால், வெறுங் கௌரவப் பிரதாப முழக்கத்தினால் சாம்ராஜ்ஜிய நிர்வாகம் நடைபெறுமா? ஆகவே, இவ்வளவு அற்புத குண விசேஷங்கள் ஆங்கிலேயரின் ஜாதீய சுபாவதத்தில் இன்னமும் உயர்ந்து விளங்கும்போது, வெறும் 'கௌரவ'த்தைக் காப்பாற்றுவதன் பொருட்டு இவ்வளவு பலத்தையும் சக்தியையும் செலவிடுவது முற்றிலும் பயனற்றதென்க. அந்த சக்தியைப் பிரஜைகளின் நன்மையின் பொருட்டு உபயோகப்படுத்தினால், ஆள்வோர் ஆளப்படுவோர் ஆகிய இரு தரத்தாருக்கும் மிக்க லாபகரமாகும்.

பாரத தேசமானது வெளி நாட்டு ஜாதியாருடன் உறவு(ய்)தலால் மெல்லமெல்ல விழித்துகொண்டு வருகிறது என்று ஏற்கெனவே சொன்னோமன்றோ? இந்தச் சொற்ப விழிப்பின் பலனாக, சுதந்திரமும் சுயாதீனமுமான கருத்துகள் சிறிது மட்டிலும் எழுந்திருக்கின்றன. ஒரு பக்கத்தில், பிரத்தியக்ஷ சக்திப் பிரயோகத்தால் சோதித்துக் கண்டறியப்பட்ட பௌதிகதத்துவ நிச்சயமென்னும் திவ்ய ரதத்தில் ஆரோகணித்துக் கோடி சூரியப்பிரகாசத்துடன் கண்கூசும்படி ஜொலிக்கும் தற்

காலத்து மேனாட்டு விக்ஞான சாஸ்திரம் விளங்குகிறது; இன்னொருபக்கத்தில், பாரததேசம் மகோன்னத நிலையில் இருந்த காலத்து ஆற்றலைப் பெருக்கியவைகளான அதன் முன்னோர்களின் ஐதிகங்கள்,—யுகயுகாந்தரமாய்ப் பாரததேசத்தின் சரீரமுழுவதும் உலகளாவிய உண்மை யன்புடன் ஜீவ சக்தியைப் புகுத்தியுள்ளவைகளென்று சுதேசிய விதேசிய விற்பன்னர்களால் அதன் பிராசீன இதிகாசத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட ஐதிகங்கள்,—துர்லபமாகிய அபூர்வ விக்கிரமம், அமாநுஷ பிரஜ்ஞை, அத்விதீயமான அத்யாத்மதத்துவம்—இவைகளை உணர்த்தும் ஐதிகங்கள், இத் தேசத்தின் வருங்கால சுபசூசகங்களாக நிகழ்கின்றன. ஒரு பக்கத்தில் கொழுத்த நாஸ்திகம், தனதானிய சம்பத்து, மகத்தான அதிகாரம், அத்தியந்த இந்திரிய சுகபோகம்,—இவைகள் அன்னிய பாஷைப் படிப்பின் வாயிலாகப் பெருங் கிளர்ச்சி உண்டாக்கியிருக்கின்றன; இன்னொரு பக்கத்தில் இந்தச் சந்தை யிரைச்சலின் கோலாகலக்குழப்பத்தின் ஊடே ஈன ஸ்வரமாயினும் உயிர் நிலையைத் தாக்கும்படியான உரத்த குரலில் எல்லைத்தேவர்கள் ஓலமிட்டுக் கதறும் சத்தம் செவியில் நுழைகிறது. மேலும் மேற்குச் சீமையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பலவகையான விசித்திர போக பதார்த்தங்கள் எங்கும் கண்ணைக்கவரும் விதமாய் விளங்குகின்றன; தேவாமிருதத்துக் கொப்பான பானங்கள், விலையேற்றிய ராஜபோஜனம், ரம்மியமான உடைகள், மனோகரமான மாளிகைகள், நூதன வாகன விசேஷங்கள்,—நவீன நாகரிகப் பாங்குகள், புதுக் கல்வி கற்ற

பெண்மணிகள் நாணயமற்ற சுயேச்சையுடன் 'ஷோக்' காய் உடுத்து உல்லாசமாய் உலாவுவதற்காக ஏற்பட்டிருக்கும் புதிய 'பாஷன்'கள்—இவையெல்லாம் முன் அனுபவித்தறியாத ஆசைகளைக் கிளப்புகின்றன. மற்றும் இந்தக் காட்சி மாறி, சீதை, சாவித்திரி, விரதம், உபவாசம், தபோவனம், சடைமுடி, மரவுரி, காஷாயம், கௌபீனம், சமாதி, ஆத்மானுசந்தானம்—இவை தோற்றுகின்றன. ஒரு பக்கத்தில் மேற்குச் சீமையாரின் தன்னயப் பற்றுள்ள சுயாதீனப்பான்மை, இன்னொரு பக்கத்தில் ஆரிய சமூகத்தாரின் கடுமையான தன்னல மறுப்பு—ஸ்வார்த்தபரித்யாகம். இப்படிப்பட்ட கோரமான திண்டாட்டத்தில் அகப்பட்ட சமாஜத்தின் புத்தி ஸ்திரமில்லாமல் கலங்குவதும் ஓர் ஆச்சரியமா? மேற்குச் சீமையாரின் லக்ஷியம், வியஷ்டிஸ்வாதீனம்—அவனவன் தன்மட்டில் சுயேச்சையாய் நடப்பது; அதற்குச் சாதனம் அர்த்தகரீ வித்யா—பொருளளிக்கும் கல்வி; மார்க்கம், ராஜதந்திரம். பாரததேசத்துக்கோ லக்ஷியம், முக்தி; அதற்குச் சாதனம், வேதம்; மார்க்கம், தியாகம் அல்லது துறவு. தற்காலத்துப் பாரதவாசி, "ஐயோ, செத்தபின் எப்போதோ சிவபோகம் உண்டாகப் போகிறதென்று வீண் மயக்கத்தில் விழுந்து இம்மை வாழ்வைப் பாழாக்கிக்கொண்டேனே," என்று ஒரு சமயம் ஏங்குவான். மறுபடியும், "மாறிமாறிப் பிறப்பதும் இறப்பதுமாகிய் அனர்த்தங்கள் நிறைந்த இந்த சம்சாரத்திலே, ஏ மனிதனே, உனக்கு ஆனந்தம் எவ்வாறுண்டாகும்?" என்னும் ஞானவாக்கைச் செவியுற்று மந்திரத்தாற் கட்டுண்டவன்போல் பரவசமடைந்து நிற்பான்.

ஒரு பக்கத்தில் நவீன பாரதம் சொல்லுகிறது, "வதூ வரர்களை* நிச்சயிப்பதில் எமக்குப் பூர்ண சுதந்திரம் இருக்க வேண்டும்; ஏனெனில் எமது பிற்கால வாழ்க்கையின் சுகதுக்கங்களுக்கெல்லாம் இந்த விவாகமே மூலமாயிருப்பதுபற்றி, எம்முடைய இஷ்டப்படி நிச்சயிப்பதற்குச் சுதந்திரம் வேண்டும்," என்று. இதற்கு மாறுகப் பிராசீன பாரதம், "விவாகமென்பது இந்திரிய போகத்துக்காக வன்று; தர்மப்பிரஜைகளை உற்பத்தி செய்து வம்சவிருத்தி செய்யும் பொருட்டாம். இதுதான் விவாக விஷயத்தில் பாரத தேசத்தின் சித்தாந்தம். மக்களைப் பெறுவதனுல் சமாஜத்தின் பிற்கால நன்மை தீமைகளுக்கு நீ உத்தரவாதியாகிருய். ஆகையால் நீ இன்னுரை மணக்கலாம், இன்னுரை மணக்கக் கூடாது என்று நிர்த்தாரணம் செய்ய சமாஜத்துக்கு அதிகாரமுண்டு. சமாஜ க்ஷேமத்துக்கு எவ் விதமான விவாக வழக்கம் அனுகூலமோ அவ் விதமான வழக்கமே நடைபெற்று வருகிறது. நீ அசேஷ ஜன ஹிதத்தின் பொருட்டு உன் ஒருவனுடைய சுகபோக விருப்பத்தை விட்டுவிடக் கடவை," என்று கட்டளையிடுகிறது. ஒரு பக்கம் நவீன பாரதம் சொல்லுகிறது, "நாம் மேற்குச் சீமையாரின் நடை நொடி பாவனைகளையும், மேற்றிசைப் பாஷையையும், மேல் நாட்டு ஆகாரங்களையும், மேற்றேயத்து உடைகளையும் ஆசாரங்களையும் அவலம்பித்தால்தான், நாம் மேற்றிசை ஜாதிகளைப்போல் பலவீர்யசம்பன்னர்க ளாவோம்," என்று. இன்னொரு பக்கத்தில் பிராசீன பாரதம் கூறு

---

* வதூ வரர் = மணப்பெண் மணமகன்.

கிறது:—" மடையர்களே, அநுகரணத்தினல் *பிறருடைய பாவனைகள் ஒருபோதும் தம்முடையவை ஆகா. சுயமாய்ச் சம்பாதிக்காவிடில், எதுவும் உன்னுடையதாகாது. சிங்கத்தின் தோலைப்போர்த்துகொண்ட மாத்திரத்தில் கர்த்தபம் மிருகேந்திரன் ஆகிவிடுமோ?"

ஒரு பக்கத்தில் நவ்ய பாரதம் கூறுகிறது, "மேற்குச்சீமையார் எதைச்செய்கிருர்களோ அது நிச்சயமாய் நன்மை யானதே யாம். இல்லாவிடில், அவர்கள் அவ்வளவு பெருமை பெற்றிருப்ப தெங்ஙனம்?" இன்னெருபக்கத்தில் பிராசீன பாரதம் கூறுகிறது, "மின்னல் பளிச்சிடுவது மிக்க பிரகாசமாய்த்தான் இருக்கிறது; ஆனல் அது கணப்பொழுதில் தோன்றி மறைகிற தன்றோ? குழந்தைகளே, பத்திரம், அது உங்கள் கண்களைச் சிதறடித்துவிடும், ஜாக்கிரதை!"

அப்படியாயின், நாம் மேற்குச் சீமையிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டியது ஒன்றுமே யில்லையா? நாம் மேலானவற்றை அடைய முயலவேண்டிய அவசியமில்லையா? நாம் பரிபூரணர்களா? நமது சமாஜம் சர்வவிதத்திலும் களங்கமற்றதா? தோஷலேசமும் இல்லையா?—என்ருல், கற்றுக்கொள்ள வேண்டியவை எத்தனையோ இருக்கின்றன. நூதனமான உத்தம விஷயங்களுக்காகச் சாந்தனையும் முயன்று பாடுபட வேண்டியதே. முயற்சியே மானிட வாழ்க்கையின் உத்தேசியம். "முயற்சி திருவினை யாக்கும்". "ஜத திந பாஞ்சி, தத திந சிகி," அதாவது "உயிரோடிருக்கும்

* அநுகரணம்=ஒருவன் செய்வதைப் பார்த்து அதைப் போல் செய்தல்.

வரையில் கற்றுக் கொண்டே இருக்கிறேன்," என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறுவ துண்டு. எந்த மனிதனுக்கு அல்லது எந்த சமாஜத்துக்குக் கற்றுக் கொள்ள வேண்டியது ஒன்றுமில்லையோ, அந்த மனிதனும் அந்த சமாஜமும் மிருத்தியுவின் வாயில் விழுந்து விட்டது போலவேயாம். மேற்குப்பக்கத்தாரிட மிருந்து நாம் அனேக விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுவது அவசியமே. ஆனால் அதில் ஆபத்தும் இருக்கிறது.

சொற்ப புத்தியுள்ள வாலிபனொருவன் ஸ்ரீராமகிருஷ்ணரின் எதிரில் எப்போதும் நமது சாஸ்திரங்களைத் தூஷித்துக்கொண் டிருப்பது வழக்கம். அவன் ஒரு நாள் பகவத்கீதையை அதிகமாய்ப் புகழ்ந்து பேசவே, ஸ்ரீராமகிருஷ்ணர், "வெள்ளைக்கார பண்டிதன் எவனோ கீதையைப் புகழ்ந்திருப்பதாகத் தோற்றுகிறது; ஆகையால்தான் இவனும் அப்படியே புகழ்கிறான்," என்று சொன்னார்.

ஓ பாரத தேசமே, இதுதான் உனக்குப் பேராபத்தாயுள்ளது. மேற்றிசை யனுகரணம் என்னும் மோகாவேசம் உன்னைப்பலமாய்ப் பற்றியிருப்பதால், உனக்கு நன்மை இது, தீமை இது என்பதைப் புத்தியினாலும், விசாரணை யினாலும், விவேகத்தினாலும் சாஸ்திரப் பிரமாணத்தினாலும் நிர்ணயிப்பது போய்விட்டது. எந்தெந்தக் கருத்துகளையும் எந்தெந்த ஆசாரங்களையும் வெள்ளையர் விரும்புகிறார்களோ, புகழ்கிறார்களோ, அவையே நல்லவை; எவற்றை அவர்கள் வெறுக்கிறார்களோ, பழிக்கிறார்களோ அவை அவசியம் தீயவையே! ஐயோ

கஷ்டமே! இதைவிட அவிவேகத்துக்கு வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?

மேற்றிசை மாதர் சுயேச்சையாய் எங்கும் சஞ்சரிக்கிறார்கள்,—ஆகையால் அது நல்லது; மேனாட்டு மடந்தையர் சுயம்வர விவாகம் செய்து கொள்ளுகிறார்கள்,—ஆகையால் அதுவே உந்நதியின் உயர்ந்த படி; மேனாட்டார் நமது உடையையும், அணியையும், உணவையும், ஒழுக்கத்தையும் உவப்பதில்லை,—ஆகையால் அவை மிக்க கெட்டவையாகவே இருக்கவேண்டும்; மேற்குச் சீமையார் மூர்த்தி பூஜை பாபகாரிய மென்கிறார்கள்,—ஆகையால் உள்ளபடியே மூர்த்தி யுபாசனை மகா பாதகம், சந்தேகமே யில்லை!

மேற்றிசையார் ஒரே தேவனைத் தொழுவது உத்தம வழி என்கிறார்கள்,—ஆகையால் நம்முடைய தேவர் தேவிகளைத் தூக்கிக் கங்கையில் எறிந்து விடுவோம்! மேனாட்டார் ஜாதிபேதம் பாராட்டுவது தோஷ மென்கிறார்கள்,—ஆகையால் எல்லா வர்ணங்களையும் ஏகாகாரமாக்கிவிடுவோம்! மேற்றேயத்தார், பாலிய விவாகமே சகல அனர்த்தங்களுக்கும் மூலம் என்கிறார்கள்,—ஆகவே அதுவும் மிகக் கெட்டதே, நிச்சயமாய்க் கெட்டதே!

இந்த ஆசாரங்களெல்லாம் கொள்ளத்தக்கவையா, அல்லது தள்ளத்தக்கவையா என்பதைப்பற்றி ஈண்டு பேசவந்தோமில்லை; ஆனால் மேற்றிசையாரின் அசம்மதியே நமது ஆசாராநுஷ்டானங்கள் அருவருப்பானவை என்பதற்குக் காரணமாயின், அப்படிப்

பட்ட வாதத்தைப் பலமாய்க் கண்டிக்கவேண்டுவது நமது கடமை என்க.

இந்த நூலாசிரியனுக்கு மேற்றிசைச் சமாஜத்தைப்பற்றிச் சிறிது பிரத்தியக்ஷாநுபவ முண்டு. அதிலிருந்து உண்டாயிருக்கும் திடமான அபிப்ராயமென்னவெனில்,—மேற்குச் சீமைச் சமாஜத்துக்கும் பாரத தேச சமாஜத்துக்கும் மூல கதியிலும் முக்கிய லக்ஷியத்திலும் உள்ள விசேஷ வேற்றுமை காரணமாக, மேற்றிசைப் பத்ததியை அனுசரித்துப் பாரத தேசத்தில் அமைக்கப்பட்ட எந்த சம்பிரதாயமும் நிஷ்பலமே யாகும். மேனாட்டுச் சமாஜத்தில் ஒருபோதும் வசியாமலும், மேற்றிசைச் சமாஜத்தில் ஸ்திரீஜாதியின் கற்பைப் பாதுகாப்பதன் பொருட்டு ஸ்திரீபுருஷர்கள் ஒருவரோடொருவர் கூடிப் பழகுவதைப் பற்றிய விதி நிஷேதங்களை முற்றிலும் அறியாமலும், எவர்கள் நம் தேசத்தில் ஸ்திரீபுருஷர்கள் எவ்வித கட்டுக் காவலுமின்றி யதேச்சையாய் அளவளாவலாம் என்கிறார்களோ, அவர்களுடன் எமக்கு அணுமாத்திரமும் ஒற்றுணர்ச்சி இல்லை.

துர்ப்பல ஜாதியாரின் மக்கள் இங்கிலாந்தில் பிறந்தால், தங்களை கிரேக்கர், போர்த்துகேசியர், இஸ்பானியர் என்று சொல்லிக்கொள்வதற்கு மாறாக ஆங்கிலேயரென்று சொல்லிக்கொள்வதை நான் மேற்குச் சீமையிலும் கவனித்திருக்கிறேன். பலவான்களின் பக்கத்திலேயே எல்லோரும் வந்து சேருகிறார்கள். பிரதாபசீலர்களிடத்தில் பிரகாசிக்கும் பிரதாப காந்தி எப்படியாவது தங்கள் தேசத்தின்மீதும் விழுந்து பிரதிபலிக்க

வேண்டும், அதாவது, கௌரவம் பொருந்தியவர்களின் கௌரவத்தை இரவல் வாங்கிப் பெருமை யடைய வேண்டு மென்பதே துர்ப்பலர்களின் இச்சை யாம். பாரதவாசிகள் ஐரோப்பிய உடை தரித்து மகிழ்வதைப் பார்க்கும்போது இவர்கள் கல்வியறி வற்றவர்களும், தரித்திரர்களும், தள்ளி மிதிக்கப் படுகிறவர்களுமான பாரத வாசிகளைத் தங்கள் ஜாதியா ரென்றும் இனத்தா ரென்றும் பாராட்டிக்கொள்ள வெட்கப்படுகிறார்க ளென்று எனக்குத் தோற்றுகிறது. பதினன்கு நூற்றாண்டுகளாக ஹிந்துதேச ரத்தத்தினால் வளர்ந்து புஷ்டியடைந்த பார்ஸி ஜாதியானும் இனி தான் 'நேட்டிவ்' அல்லன்என்கிறான்! தாம் பிராமணரென்று நடித்துப் பெருமைபாராட்டும் ஜாதிகெட்டவர்களின் இறுமாப்புக்குமுன், உயர்ந்த குலத்திற் பிறந்து பிரம்ம தேஜஸுடன் ஜொலிக்கும் பிராமணரின் வம்ச மரியாதை ஓடியொளிக்கிறது! மேலும் பாரத தேசத்தில் இடுப்பு வரையில் துணிகட்டும் படியாத மூடர்களாகிய கோடிக் கணக்கான தாழ்ந்த ஜாதி ஜனங்கள் ஆரியர்களல்லர் என்று இப்பொழுது மேற்றிசையார் நமக்குப் போதிக்க வருகிறார்கள்! இனி அவர்கள் நம்மைச் சேர்ந்தவர்களே யல்லர்!!

ஓ பாரத தேசமே! இந்தப் பர நிந்தை, இந்த நீசமான பரானுகரணம், இந்தப் பரதந்திரம், இந்த அடிமைத்தனமான துர்ப்பலம், இந்த வெறுக்கத்தக்க இழிவான கொடுமை—இவைகளையே வழித்துணையாகக் கொண்டுதானே நீ நாகரிகப் பெருமைகளின் உன்னத சிகரத்துக்கு ஏறிச் செல்ல ஆசைப்படுகிறாய்? இந்த

அவமானகரமான கோழைத்தனத்தின் துணையைக் கொண்டோ நீ வீரபோக்கியமான * சுதந்திரத்தை அடைவை? ஓ பாரத தேசமே! மறவாதே—உனது உத்தம ஸ்திரீ ஜாதியின் ஆதர்சம் சீதை, சாவித்ரி, தமயந்தியென்பதை! மறவாதே—உனக்கு வழிபடு கடவுள் யோகியோகேசுவரனும் சர்வதியாகியுமாகிய உமாபதி சங்கரன் என்பதை! மறவாதே—உன் விவாகம், உன் செல்வம், உன் வாழ்வு இவை யெல்லாம் இந்திரிய சுகத்தின் பொருட்டும் உன் தனிமையான பிரத்தியேக அனுபவத்தின் பொருட்டு மல்ல வென்பதை! மறவாதே—நீ பிறந்தது முதல் ஜகதம்பிகையின் பொருட்டுப் பலியாகச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை! மறவாதே—உனது சமாஜ முறைமை அந்த ஜகதம்பிகையான அனந்த சக்தியின் பிரதிபிம்பமாத்திரமே யென்பதை! மறவாதே—தாழ்ந்த ஜாதியாரும், அறிவிலிகளும், ஏழைகளும் எழுத்தறியாதவரும், சக்கிலியரும், பறையரும் உன்னுடைய சதை, உன்னுடைய இரத்தம், உனது உடன் பிறவிகள் என்பதை! மறவேல்! மறவேல்! ஓ வீரனே, நீ சாகஸத்தைக் கடைப்பிடித்துத் தைரியமாய் நிமிர்ந்து இறுமாப்புடன் சொல்,—நான் பாரதவாசி, ஒவ்வொரு பாரதவாசியும் என் உடன்பிறந்தவன், சொல்,—மூட பாரதவாசி, தரித்திர பாரதவாசி, பிராமண பாரதவாசி, சண்டாள பாரதவாசி—எல்லோரும் என் உடன் பிறப்பே! இடுப்பில் கந்தை யுடுத்தாலும் குரலெடுத்து உரத்த சத்தமிட்டுப் பெருமையாய்ச் சாற்று,—பாரதவாசியே எனது சகோதரன், பாரதவாசியே என் உயிர்,

* வீரபோக்கியம்=வீரர் அனுபவித்தற்குரியது.

பாரத தேசத்தின் தேவதேவியரே எனக்குப் பரதெய்வம், பாரதஜன சமாஜமே நான் பிறந்து வளர்ந்த தொட்டில், என் யௌவனத்தின் நந்தவனம், என் மூப்பின் புண்ய தபோவனம், என் வார்த்திகத்தின் வாராணஸி! சகோதரனே, பாரத வர்ஷத்தின் மண்ணே உனக்கு உத்தமலோகமாகிய சுவர்க்கம், பாரததேசத்தின் க்ஷேமமே உன் க்ஷேமம் என்று சிந்தித்து, "ஹே கௌரீநாத, ஹே ஜகதம்பிகே, எனக்கு ஆண்மையை அருள்! தாயே, சக்திஸ்வரூபிணி, பலதாயினீ, என் துர்ப்பலத்தைப் போக்கு! என் பௌருஷமின்மையை நீக்கு! என்னை ஆண்மகனுக்கு!" என்று அல்லும் பகலும் அனவரதமும் கதறிக் கதறித் தியானம் செய்!

நம: பார்வதீபதயே!

ஓம் தத்ஸத்.

சாந்தி: சாந்தி: சாந்தி:

ஹரி: ஓம்.

குறிப்பு:—சம்ஸ்கிருத பிரயோகங்களையும் சம்ஸ்கிருத மொழிகளையும் தமிழ் எழுத்துக்களில் எழுதும் விஷயத்தில் "கம்ப நிலயம்" ஒரு முறையை அனுஷ்டித்து வருகிறது. மொழி பெயர்ப்பாசிரியருடைய முறை வேறாக இருந்தும், "கம்ப நிலய"ப் பதிப்புகளில் ஒரே முறையை அனுஷ்டிக்க வேண்டியதன் அவசியத்தை உத்தேசித்து நம்முடைய முறையையே இந் நூலிலும் அனுஷ்டித்திருக்கிறோம். ஆகையால் இவ் எழுத்தமைப்புக்குக் "கம்ப நிலயம்"தான் உத்தரவாதமேயொழிய ஆசிரியர் அல்லர் என்று படிப்போருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

—கம்ப நிலயம்.

4067

Cmd G

4 4 68

© [illegible]

21988